233

டு-களஅ.

பதினெண் கீழ்க்கணக்கு

ஐந்திணையைம்பது

மாறன் பொறையனார்
இயற்றியது.

2355

பண்டிட்
அ. நடராச பிள்ளை
எழுதிய உரையுடன்

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.
TINNEVELLY SEPT. 1935 & MADRAS

PRICE AS. 6.

கழக வெளியீடு—கஎஅ.

மாறன் பொறையனர்
இயற்றிய

ஐந்திணையைம்பது

மூலமும், பழையவுரையும்,

OFFICE OF THE REG...
15 APR 1936
MADRAS

சென்னை
அரசினர் மகமதிய உயர்தரப் பாடசாலைத்
தமிழாசிரியர்
திரு. அ. நடராசபிள்ளை யவர்கள்
எழுதிய
விளக்கவுரையும்.

2378
894.811

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை

யுவ-ஆவணி

[*Copyright*]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: : PUBLISHING SOCIETY, : :
: : TINNEVELLY, LTD., : :
TINNEVELLY & MADRAS

Sept. 1935

The Jupiter Press, Madras

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 APR 1936
MADRAS

முகவுரை

நம் பண்டைத் தமிழ் மக்கள் தாய்மொழியாகிய தமிழினை முச்சங்கத்திருத்தி முதன்மையுற வளர்த்தன ரென்பதும், கடல்கோள் சிலவான் அவர்தம் மொழிச் சிறப்பும் வழிச்சிறப்பும் முட்டின்றி யறிய வொண்ணாது ஆழ்கடலகத்தே யமிழ்ந்த வென்பதும், அவற்றுட் சில, நம்மனோரின் நற்றவப்பேற்றாற் கிடைத்துள்ள சங்கநூல்களிற் கண்டு களிக்குங் கவினுடன் காணப்படுகின்றன வென்பதும் அறிஞர்கள் பலர் அகமுறக் கண்டனவாம். முச்சங்கங்களிற் கண்ட பலநூல்களிற் கிடைத்த சிலவே, பிற்காலத்தில் வச்சிரநந்தி யென்பார் கண்ட நான்காஞ் சங்கத்தாரால் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்ற தொகை முறைப்படி வகுக்கப்பட்டு வழங்கி வரலாயின. மேற்கணக்கைச் சார்ந்த நூல்கள் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை என்ற உட்பிரிவுகளையுடைய பதினெட்டுமாம். மேற்கணக்கின் இலக்கணத்தினை,

> "ஐம்பது முதலா வைந்நூ றீறு
> வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
> றெருக்கப் படுவது மேற்கணக் காகும்,"

என்ற பன்னிரு பாட்டியற் சூத்திரத்தா லறியலாம்.

கீழ்க்கணக்கைச் சார்ந்த நூல்கள் (க) நாலடியார், (உ) நான்மணிக் கடிகை, (ங) இனியது நாற்பது, (ச) இன்னா நாற்பது, (ரு) களவழி நாற்பது, (சு) கார் நாற்பது, (எ) ஐந்திணை யைம்பது, (அ) ஐந்திணை யெழுபது, (கூ) திணைமொழி யைம்பது, (ய) திணைமாலை நூற்றைம்பது, (கக) திருக்குறள், (கஉ) திரிகடுகம், (கங) ஆசாரக்கோவை, (கச) பழமொழி, (கரு) சிறுபஞ்சமூலம், (கசு) முதுமொழிக் காஞ்சி, (கஎ) ஏலாதி, (கஅ) கைந்நிலை என்பனவாம். இக் கீழ்க்

கணக்கின் இலக்கணம் இரண்டடி முதல் ஆறடி யீருகவுள்ள வெண்பாவினுலேனும், அத னினத்தாலேனும் நாற்பது செய்யுள் முதல் ஆயிரக்கணக்கா னியன்ற செய்யுள்வரை அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருள்களில் யாதானு மொன்றினை யெடுத்துக் கூறும் நூல்களின் தொகுதி யென்பதாம்.

ஐந்திணையைம்பது என்னு மிந்நூல் அம்முப்பொருள்களி லொன்ருகிய இன்பத்தினை எடுத்து விளக்கிச் சொல்வதாகும். முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்னும் ஐந்திணைக ளாகிய இருத்தல், புணர்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்ற ஐந் தொழுக்கங்களும் இந்நூலிற் பப்பத்து வெண்பாக்களாக ஐம்பது வெண்பாக்களாற் கூறப்பெற்றுள்ளன. அதனுனேயே இந்நூலிற்கு ஐந்திணையைம்பது என்ற பெயர் வரலாயிற்று. இந்நூல் அன்பின் அமைதியாகிய ஐந்திணையொழுக்கங்களைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் நேர்மை தமிழ் மக்கள் யாவரும் மனத்தகத்தே கொண்டு மகிழவேண்டிய தொன்ரும். இது கருதியே பாயிரத்தின் கண், "ஐந்திணையைம்பதும் ஆர்வத்திேைதாதார், செந்தமிழ் சேராதவர்," என இந்நூல் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளது. அன்பின் அணிமுடியாகிய கற்பின் றிறனைச் செப்பும் முல்லை முதற் கட் கூறப்பட்டு, பின் அன்பின் விளைவாகிய புணர்தலும், அப் புணர்ச்சிக்குச் சிறப்பினை நல்கும் ஊடலும், அவ்வூடற்கு முதலாகிய பிரிதலும், அப்பிரிவின் மிகுதியான் வெளிப்படும் இரங்கலும் முறையே வைக்கப் பெற்றுள்ளன.

முல்லையை முதற்கட் டொடங்கிய ஆசிரியர் முல்லைத் திணைக் குரிய முதற் கருப்பொருளாகிய மாயோனையும், அவன் மருகனுகிய முருகனையும், செந்தமிழ்த் தெய்வமாகிய சிவபெருமானையும் முன்னர்க் கொண்டு முல்லையினைச் சிறப்பித்துச் செல்லல், ஓரம் பிறு லிருபுள்ளினை வீழ்த்திய வோவியச் செய்தியே யாகும். இனி, முல்லையுள் முதலைந்து செய்யுட்களில் முல்லையின் முதற்பொருளா கிய கார்காலத் தோற்றத்தினைக் கற்பார்தங் காட்சியிற் படம் பிடித் துக் காட்டுவார்போற் கூறுந்திறன் மிகுதியும் போற்றத் தக்கதாம்.

பின்னைந்து செய்யுட்களில், மாலைப் பொழுதின் மாண்பும், கார்ப் பெயலாற் செழிப்புற்ற முல்லை நிலக்கவினும், தலைவியின் அன்பு ததும்பிய கற்புத்திறனுங் கற்பார் நெஞ்சைக் கவருந் திறத்தவாயுள் என. குறிஞ்சியுள், களவுப் புணர்ச்சிக் குரிய பழங்காலப் பழக்கங் களும், சிறிது கூறிப் பெரிது விளக்குஞ் சிறப்பும், வரைவுகடாவு வழிகளும், குறிஞ்சி நில இரவுக் காட்சிகளும், பகற் பண்புகளும் நினைவகத் திருத்தவேண்டிய நிகரிலாப் பொருள்களாம். "வேங்கை நறுமலர்," எனத் தொடங்குகின்ற செய்யுளில், தோழிகூற்றாக, "யாம் பாய்ந்தருவி யாடினே மாகப் பணிமொழிக்குச் சேயரிக்கண் சேந்தனவாம்," எனக் கூறும் படைத்துமொழி கிளவியில் தலைவி யின் கண்கள் மட்டுஞ் சிவந்து காண்பதற்குப் பொருத்தமாக, "சேயரிக்கண்," எனக் கூறுஞ் சிறப்பு மிகுதியும் வியந்துகொள்ளத் தக்கதாம்.

மருத முதற்கண், "கொல்லர் தெருவில் ஊசிவிற்றல்", என்ற பழமொழியினைக் கையாண்டு, தாம் எடுத்துக்கொண்ட பொருளைப் புகட்டப் புகுந்த ஆசிரியர் அப்பழமொழிக்குமுன், "கொண்டுழிப் பண்டம் விலையொரீஇ," என்ற அடைமொழிகளைச் சேர்த்துப் பழ மொழிப் பொருளைத் தெளிவு படுத்துந் திறன் மகிழ்ந்து கொண் டாடும் மரபினதாம். "கோலச் சிறுகுருகின் குத்தஞ்சியீர்வாளை, நீலத்துப் புக்கொளிக்கும்," என்ற மருதநில வளனைக் கூறும் அடிகள் நளவெண்பாவிற்கண்ட, "செங்கழுநீர் மொட்டை, அர வின் பசுந்தலை யென்றஞ்சி—இரவெல்லாம், பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புட் டாலாட்டும்," என்ற அடிகளை நினைவிற் கொண்டுவரக் கூடியனவாய்க் காண்கின்றன. 'குளிருங் காலமாகிய ஐப்பசி, கார்த்திகைத் திங்கள்களில் வீசுந் தென்றல் மெய்யிற் கினிதாம்,' என்ற ஆராய்ச்சியுரை பொன்னேபோல் போற்ற வேண்டிய பொருண்மொழியாம்.

பாலையுட் பகர்ந்துள்ள இளவேனிலின் இயல்பும், தலைவன் பிரிந்து செல்லும் பாலை நில அருவழியின் பாடும், களிறு பிடியின் மாட்டுக் காட்டும் பேரருளின் பெற்றியும், கானலினைத் தொடர்ந்

தோடுங் கரியினைப் போக்கும், கலைமா பிணைமானிடத்திற் கொண்ட பேரன்புங் கொண்டாடிக்கொள்ள வேண்டுவனவாம்.

நெய்தலுள், "தெண்கடற் சேர்ப்பன்," எனத் தொடங்கு கின்ற செய்யுளில் சிறிது கூறிப் பெரிது விளக்கும் பெற்றி சிறந்து காணுதல் கூர்ந்து தெளிக. மேலும், பல்லி முட்டையின் இயல்பினைப் பண்புறக்கூறிப் புன்னை யரும்பினோடு பொருந்துமாறு புகன்ற முறையும், படைத்து மொழிகிளவியான் வரைவு கடாவும் மாண்பும், தலைவி வரைவு வேட்கையைக் குறிப்பாகத் தெரிவிக்கும் கொள்கையும், தோழி தலைவியின் வரைவு வேட்கையைத் தலைவற்குச் சிலவாகிய அடைமொழிகளாற் றெரிவிக்குந் திறமும், கடற்கரைக் காட்சியும் அந்நெய்தற்றிணையை நெஞ்சகத்தே நிலையுறச் செய்ய வல்லவாய் வாய்த்துள்ளன.

இந்நூலுள், மலைநாட்டார் மலைச்சாரலை நெருப்பிட் டழித்து, அச்சாம்பரினையே எருவாக்கி உழுது பயிரிடும் ஒரு பெரும் வழக்கமும், குதிரைகளை, கழுத்தில் ஒலிக்கும் மணிகளிட்டு, தேரிற் பூட்டி யோட்டலாகிய மரபும், போரிற் பட்டார்க்கு அவரைப் புதைத்த விடத்தே அவர் பெயர் வரைந்த கல்லை நட்டுச் சிறப்புறச் செய்து போற்றுஞ் செயலும், புண்ணிற்குக் காரமென்ற ஒருவகை மருந்தினை யிட்டு ஆற்று முறையும், வெறியாடலாகிய முருகன் விழவும் காணக் கிடக்கின்றன. மகளிர் அருவி யாடலும், அதனாற் கண்சிவத்தலும், கூடல் இழைத்து எதிர்கால நிகழ்ச்சியைக் குறித்துணர்தலும், மலைநாட்டு மகளிர் வளர்தினை காத்தலும், வேங்கை மலர் கொய்தலும், நெய்தன் மகளிர் மீன் உணங்கல்களைக் கவர வரும் புட்களை ஒப்புதலும், கடற்கரையிற் சிறு மனை கட்டி விளையாடலும், அச்சிறுமனைக்கு முத்துக்களை விளக்காகக் கொள்ளலும், மகளிர் கவுளின்மீது கையூன்றி நிற்றலும் அக்கால வழக்கென இந்நூலால் அறியலாகும்.

இதன்கண் பெரும்பாலும் நேரிசை வெண்பாக்களும், சிறுபான்மை இன்னிசை வெண்பாக்களும் வந்துள்ளன. பாலைக்கண் முதற் செய்யுளில், இரண்டாமடி,

"வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியு முளவென மொழிப,"

என்ற தொல்காப்பிய விதிப்படி ஐஞ்சீர் கொண்டு வந்துள்ளது. இந்நூலினை இயற்றிய, 'மாறன்பொறையனார்' என்பார், பாயிரத் தின்கண், "வண் புள்ளிமாறன் பொறையன்," எனக் கூறப்படுத லான், 'பொறையன்,' என்ற இயற் பெயரோடு, 'மாறன்,' என்ற சிறப்புப் பெயரினைப் பெற்றுப் பாண்டிநாட்டு அரசியலிற் பெருநிலை யொன்றைப் பெற்றிருந்த பெரியார் எனக் கருதப்படுகின் றனர். இவரைப் பற்றிய செய்தி வேறொன்றும் விளக்கமாகக் காணுதற் கில்லை. இந்நூலிற்கு அருமையான பழைய பொழிப்புரை யும், கருத்துரையும் காணப்படுகின்றன. அவற்றை இயற்றிய அறிஞரும் நம்மாலறிய வொண்ணாத அரும் பெரும் நிலையினையே கொண்டுள்ளார். அப் பழையவுரையினைச் சார்ந்த கருத்துரை சில விடங்களிற் பாட்டின் போக்குக்கு மாறுபட்டுக் காண்கின்றது. அப் பழைய பொழிப்புரையும் பல விடங்களிற் கற்போர்க்குக் கருத்தினை மயங்கச் செய்வனவாய்க் காணப்படுதலின், பதவுரையும் விரிவுரையும் சேர்த்து வெளியிட முன் வரலாயினன். பெரும் புலவர்கள் புகுந்து செய்யவேண்டிய இப்பணியினை முடிக்க யான் முன்வந்தது, பல அறிவாளிகளின் உள்ளத்தே கிளர்ச்சியைப் பெருக்கி, இந்நூலிலுள்ள பல அரும்பொருள்களை அவர்கள் வெளி யீட்டாற் கண்டு மகிழ்வதற்கே யாமென்க.

ஆதலின், இதனைக் கண்ணுறும் பெரியோர்கள் யான் அறியா மையாற் கொண்டுள்ள பிழைகளை எடுத்துக் காட்டி என்னை மன்னிக்கவேண்டுவதோடு தமிழ் மகளைப் பல நல்லுரைகளான் மணமகளாக்க மன்றாடுகின்றனன். தோன்றாத்துணையாக முன் னின்று இதனை முடிப்பித்த எல்லாம் வல்ல இறைவற்கு எனது வணக்கம் உரியதாகுக! இதனை வெளியிட் டுதவிய தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கும், இதனை வெளியிடுங் கால் அன்பு கூர்ந்து பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்து உதவிய

மேற்படி கழகவெளியீட்டுக் குழுவுறுப்பினரும், பாளையங்கோட்டை அர்ச் சவேரியர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியரும் ஆகிய **உயர்திரு வித்வான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கட்கும்** யான் என்றும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையேன்.

இங்ஙனம்,

சென்னை, 9-9-'35 } அ. நடராசபிள்ளை.

ஓம்

ஐந்திணையைம்பது.

விளக்கவுரை பழைய பொழிப்புரையுடன்.

பாயிரம்.

பண்புள்ளி நின்ற பெரியார் பயன்றெரிய
வண்புள்ளி மாறன் பொறையன் புணர்த்தியாத்த
வைந்திணை யைம்பது மார்வத்தி னேதாதார்
செந்தமிழ் சேரா தவர்.

(பதவுரை) வண்மை - மெய்மையான, புள்ளி - இலக்கப்புள்ளியிடுவதாகிய கணக்கிற் றேர்ச்சியுள்ள, மாறன் பொறையன் - மாறன் பொறையன் என்ற சிறப்புப் பெயர் பெற்ற புலவர் பெருமான், பண்பு - மக்கட் பண்புகளை, உள்ளி நின்ற - ஆராய்ந்தறிய அவாவிக் கொண்டிருக்கும்படியான, பெரியார்-உயர்ந்தோராகிய உலகமக்கள், பயன் - நூற்பயனாகிய அகப் பொருள்களின் நுட்பங்களை, தெரிய-நன்குணரும்படியாக, புணர்த்து - அகப்பொருட் டுறைகள் பலவற்றைச் சேர்த்து, யாத்த-செய்யுள் வடிவமாக இயற்றிய, ஐந்திணை ஐம்பதும் - முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற ஐந் தொழுக்கங்களினையும் தம்முள் அமைத்துக் கொண்டுள்ள ஐம்பது செய்யுட்களையும், ஆர்வத்தின் - விருப்பத்துடன், ஓதாதார்-படித்து அறியாத மக்கள், செந்தமிழ் - செவ்வையான தமிழ் மொழியின் பெரும் பயனை, சேராதவர் - அடையப்பெறுதவர்களாவார்கள்.

(விரிவுரை) பாயிரம் - முகவுரை. "ஆயிரமுகத்தான் அகன்ற தாயினும், பாயிரமில்லது பனுவலன்றே," என்றுராகலின், முதற்கட் பாயிரங் கூறப்பட்டதென்க. "மாறன் பொறையன்," என்ற

தனால் ஆக்கியோன் பெயரும், "ஐந்திணை," என்றதனால் அகப் பொருணூலாகிய வழியும், அகமாகிய நுதலிய பொருளும், "செந் தமிழ்," என்றதனால் நூல் வழங்க வேண்டிய தமிழ் நாட்டெல்லை யும், "ஐந்திணை யைம்பது," என்றதனால் நூற் பெயரும், "யாத்த," என்றதனால் செய்யுள் வடிவமாகிய நூல் யாப்பும், "பண்புள்ளி நின்ற பெரியார்," என்றதனால் கேட்போரும், "பயன்," என்றத னால் நூற்பயனும் பெறப்பட்டமை காண்க. என்னை? "ஆக்கி யோன் பெயரே வழியே யெல்லை, நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே, கேட்போர் பயனோ டாயெண் பொருளும், வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே," என்று ராகலினென்க. புள்ளியிடுதல்- ஐந்தொகை முதலிய பெருங் கணக்குகளிட்டுப் பார்த்தல். "மாறன் பொறையன்," என்பது இந் நூலாசிரியர்க்குப் பாண்டி மன்னனு லளிக்கப்பட்ட பட்டப் பெயராம். "வண் புள்ளி" என்ற அடை மொழிகளால் இவர் பாண்டி நாட்டு அரசியலிற் பண வரவு செல வுக்குரிய பெருநிலை யொன்றிற் பெரும் பெயர் பெற்ற பெரியா ராவரெனக் கருதக் கிடக்கின்றது. புள்ளி - பணத் தொகை. செந் தமிழ் + சேராதவர் = செந்தமிழ் சேராதவர் : இரண்டன் தொகை யாகலின், இயல்பாயிற்றென்க. புணர்த்து + யாத்த = புணர்த்தி யாத்த : யகரம் வரக் குறள் உகரம் இகரமாகத் திரியலாயிற்று. இப் பாயிரம் மற்றச் செய்யுட்களைப் போல், பழைய பொழிப்புரை யினைக் கொண்டிருக்கவில்லை.

நூல்

முதலாவது—முல்லை.

மல்லர்க் கடந்தா னிறம்போன் றிருண்டெழுந்து,
செல்வக் கடம்பமர்ந்தான் வேன்மின்னி—நல்லாய்!
இயங்கெயி லெய்தவன் றார்பூப்ப வீதோ
மயங்கி வலனேருங் கார்.

[தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.]

(பதவுரை) நல்லாய் - பெண்மக்களிற் சிறந்த தலைவியே, கார் - மேகங்கள், மயங்கி - நாற்புறமும் கலந்து சூழ்ந்து, இதோ - நாம் காணும் இக்காட்சியிற்பட்டு, மல்லர் - கஞ்சனாற் செலுத்தப் பட்ட மற்போர் வீரர்களை, கடந்தான் - வென்ற கண்ணபிரானது, நிறம் போன்று - நீலவண்ணத்தினை நிகர்த்து, இருண்டு - பகலவனை மறைத்தலால் இருள் பரவும்படி, எழுந்து - வெளிப்பட்டு, செல்வம் - வளப்பமிக்க, கடம்பு - கடப்ப மலர் மாலையினை, அமர்ந்தான் - விரும்பி மேற்கொண்ட முருகப்பிரானது, வேல் - வேற் படையினைப் போல, மின்னி - மின்னலைச் செய்து, இயங்கு - இடம் பெயர்ந்து செல்லக்கூடிய, எயில் - பொன், வெள்ளி, இரும்பு என்ற மூவித உலோகங்களாலாக்கப்பட்ட பொற் கோட்டை, வெள்ளிக் கோட்டை, இரும்புக் கோட்டை என்ற மதில்களை, எய்தவன் - தனது அம்பினாற் பொடியாக்கிய சிவபிரானது, தார் - மாலையாகிய கொன்றைப் பூக்கள், பூப்ப - மலரும்படியாக, வலன் - வலமாகச் சுழன்று, ஏரும் - எழா நிற்கின்றன. (என்று தலைவிக்குத் தோழி கூறினாள்.)

(பழையவுரை) மல்லரை வென்றவன் நிறம்போல இருளைச் செய்தெழுந்து, செல்வக் கடப்பந்தாரினை விரும்பி

ஞுன் வேல்போல மின்னி, விசும்பின் இயங்குகின்ற முப்புரங் களை யெய்தவன் கொன்றைத்தார் பூப்ப மிடைந்து எழா நின்றது நல்லாய்! இக்கார்.

(விரிவுரை) முல்லை - முல்லையாகிய ஒழுக்கம்: தலைவன் பிரிவாலுண்டாம் வருத்தத்தினைப் பொறுத்து, அவன் கற்பித்த வாறே அடக்கத்தினை மேற்கொண் டிருத்தல். அகப்பொருள் இல்லறம் பற்றிய அன்புடை யொழுக்கமாதலின், தலைவன் சொற் பிழையாது நடக்குங் கற்பொழுக்கமாகிய முல்லை முதற்கட் கூறப் பட்ட தென்க. இத்திணை மாயோன் மேய காட்டின்கண் நிகழ்வ தாகலின், "மல்லர்க் கடந்தான்," என அந் நிலத்துக் கருப் பொருள் களில் முதன்மையானதை முன்னர் வைத்து நூலினைத் தொடங்க லாயினர். கார் முந்துமுன் தன் தேர் முந்துமெனத் தேற்றிச் சென்ற தலைவன் வரவுக்குரிய கார்ப்பருவத்தின் தோற்றத்தைத் தோழி தலைவிக்கு எடுத்துக் காட்டி, தலைவன் வரவு அண்மியது எனத் தேற்றுதல் செய்தனள். "இயங்கெயில்," என்ற தொட ரினை, "தூங் கெயில்," (விழாவறை காதை அடி-சு) என்ற மணிமேக லைத் தொடரினேடு ஒப்பு நோக்குக. கார் - பால் பகா வஃ றிணைப் பெயர். வலன் - மேனேக்கி என்றுமாம். கார் மயங்கி, எழுந்து, மின்னி, பூப்ப வலனேரும், என முடிக்க. கொன்றை - முல்லையின் கருப்பொருள்களி லொன்று. (க)

அணிநிற மஞ்ஞை யகவ விரங்கி
மணிநிற மாமலைமேற் றாழ்ந்து—பணிமொழி!
கார்நீர்மை கொண்ட கலிவானங் காண்டொறும்
பீர்நீர்மை கொண்டன தோள்.

[பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

(பத.) பணிமொழி - மெல்லிய சொல்லையுடைய தோழியே, அணிநிறம் - அழகிய நிறங்களைக் கொண்ட, மஞ்ஞை -

மயில்கள், அகவ - அன்போடு கூவியழைக்கும்படி, இரங்கி - இடித்து முழங்கி, மணி நிறம் - நீலமணி போன்ற நிறத்தினைக் கொண்ட, மா - பெரிய, மலைமேல் - மலைகளினிடத்தே, தாழ்ந்து - படிந்து, கார் நீர்மை கொண்ட - மழை காலத்தில் பெய்யுந் தன்மை மிகுதியும் வாய்ந்து காணப்பட்ட, கலி வானம் - நீர் நிரம்பிய மேகத் திரட்சியை, காண்தொறும் - யான் காணுகின்ற வேளைகளிலெல்லாம், தோள் - என் தோள்கள், பீர் நீர்மை - பீர்க்கம் பூவின் தன்மையை, கொண்டன - கொண்டு பொன் போன்ற பசலை பெற்று விளங்கின. (என்று தலைவி தோழியி னிடங் கூறினள்.)

(ப-ரை.) அழகிய நிறத்தையுடைய மயில்க ளழைக்க முழங்கி, நீலமணி நிறத்தையுடைய மாமலைகளின்கட் படிந்து, மெல்லிய மொழியை யுடையாய்! கார்காலத்துத் தன்மையைக் கொண்ட மிக்க முகில்களைக் காணுந்தோறும் என்றோள்கள் பீரின் தன்மையைக் கொண்டன.

(விரி.) கலி - நீர். பீர் - பீர்க்கம்பூ: முதலாகு பெயர். இரங்கி, தாழ்ந்து, கொண்ட கலி வானம் என முடிக்க. வானம் - இடவாகு பெயர். பருவம் - கார் காலமாகிய பருவம். அழிதல் - மனம் வருந்தல். பசலை - ஒருவகை நிறம். இது காதன் மிகுதியாலுண்டாம் மேனி மாற்றம். (உ)

மின்னு முழக்கு மிடியுமற் றின்ன
கொலைப்படை சாலப் பரப்பிய முல்லை
முகைவென்ற பல்லினய்! இல்லையோ? மற்று
நமர்சென்ற நாட்டுளிக் கார்.

[பருவங் கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.]

(பத.) முல்லை முகை - முல்லை யரும்புகளை, வென்ற - தன்மையான் மேற்கொண்ட, பல்லினய் - பல்லழகு மிக்க தலைவியே, நமர் - நம்மவராகிய தலைவர், சென்ற - பிரிந்து போயிருக்

கும், நாட்டுள் - நாட்டினிடத்திலே, இக்கார் - இங்குக் காணப்படும் மேகத் திரட்சி, மின்னும் - மின்னலும், முழக்கும் - ஆரவாரமும், இடியும் - இடி வீழ்ச்சியும், இன்ன - இவைபோன்ற பிறவுமாகிய, கொலைப் படை - பிரிந்தாரை வருத்துதற்குரிய ஆயுதங்களை, சால - மிகுதியும், பரப்பிய - பரப்புவதற்கு, இல்லையோ - இல்லாமற் போயிற்றோ? (என்று தோழி தலைவியினிடத்திற் கூறினாள்.)

(ப - ரை.) நமர் சென்ற நாட்டின்கண் மின்னும் முழக்கும் இடியும் என்று சொல்லப்பட்ட இக்கொலைப் படைகளை நிரம்பப் பரப்புதற்கு இக்காரில்லையோ முல்லை முகை வென்ற பல்லினாய்!

(விரி.) மற்று - அசை நிலைகள். பரப்பிய - செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஓ - ஐய வினாப் பொருளுடையது. இக்கார் நமர் சென்ற நாட்டுள் பரப்பிய இல்லையோ? என முடிக்க. சால - மிகுதிப் பொருள்தரு முரிச்சொல். அன்றி, சால் என்னு முரி யடியாற் றோன்றிய, செய என் வாய்பாட்டு வினையெச்சமுமாம். கிழத்தி - தலைவி. இக்கார் அந்நாட்டுள் இருப்பின், தலைவன் வருத்த மிகுந்து வந்து சேர்ந்திருப்பன், என்பது கருத்து. (ரு)

உள்ளார்கொல் காதல ரொண்டொடி நந்திறம்
வள்வார் முரசின் குரல்போ லிடித்துரறி
நல்லார் மனங்கவரத் தோன்றிப் பணிமொழியைக்
கொல்வாங்குக் கூர்ந்ததிக் கார்.

[இதுவு மது.]

(பத.) ஒண்தொடி - ஒளிமிக்க வளையணிந்த தலைவியே, இக்கார் - இந்த மேகக் கூட்டமானது, வள்வார் - தோல் வாரினாலே இழுத்துக் கட்டி யமைக்கப்பட்ட, முரசின் குரல்போல் - முரச வாத்திய வொலியினைப் போன்று, இடித்து - இடியினை வீழ்த்து,

ஊறி - முழங்கி, நல்லார் - கொழுநரைப் பிரிந்த பெண்களின், மனம் கவர - மனமானது வேறுபடும்படி, தோன்றி - வெளிப்பட்டு, பணி மொழி - தலைவரால் நமக்குக் கூறப்பட்ட இன் சொற்களை, கொல்வு ஆங்கு - சிதைப்பது போல, கூர்ந்தது - மிகுந்து காணப் படுகின்றது, நம் திறம் - இவ்விதமான நமது நிலையினை, காதலர் - நமதன்புக்குரிய தலைவர், உள்ளார் கொல் - நினைத்துப் பார்க்கமாட் டாரோ? (என்று தோழி தலைவியை வினவினள்.)

(ப - ரை.) நந்திறத்தைக் காதலர் உள்ளார்கொல்லோ ஒண்டொடி! தோலார்ந்த முரசின் குரலினோசைபோல இடித்து முழங்கித் தங் கொழுநரைப் பிரிந்த நல்லார் மனங் கவரும்படி தோன்றி, நங் காதலர் சொன்ன இன் சொல்லைச் சிதைப்பது போல மிக்கது இக்கார்.

(விரி.) ஒண்டொடி - அண்மை விளி. ஊற்றல் - ஒலித் தல். கவர்வு - வேறுபாடு. இக்கார் முரசின் குரல்போல் ஊறி, தோன்றி, கூர்ந்தது, என முடிக்க. பணி மொழி - ஆற்றியிருக்கு மாறு பணித்த மொழிகளுமாம். இன்சொற்கள் - ஆறுதன் மொழி கள். திறம் - தன்மை, நிலை. கொல் - ஐயப் பொருள் கொண்டது. உள்ளியிருப்பரேல் திரும்பியிருப்பர், என்பது கருத்து. (ச)

கோடுயர் தோற்ற மலைமே லிருங்கொண்மூக்
கூடி நிரந்து தலைபிணங்கி—ஓடி
வளிகலந்து வந்துறைக்கும் வானங் காண்டோறுந்
துளிகலந்து வீழ்தருங் கண்.

[இதுவு மது.]

(பத.) (என்னருமைத்தலைவியே!) கண் - நின் கண்கள், கோடு - சிகரங்களால், உயர் தோற்றம் - சிறந்த காட்சியினைக் கொண்ட, மலைமேல் - மலைகளின்மீதே, இரும் கொண்மூ - பெரும் மேகக் கூட்டங்கள், கூடி - திரண்டு, நிரந்து - கலந்து, தலை

பிணங்கி - ஒன்றோடொன்று மாறுபட்டு, ஓடி - வான் வெளியே சென்று, வளிகலந்து - காற்றோடு கூடி, வந்து - கீழிறங்கி, உறைக்கும் - பெய்யும் படியான, வானம் - ஆகாயத்தினை, காண் தோறும் - காணும் வேளைகளி லெல்லாம், துளி கலந்து - கண்ணீர்த் துளிகளை மிகப் பெற்று, வீழ்தரும் - பெய்விக்கின்றன.

(ப - ரை.) குவடுகளுயர்ந்த தோற்றத்தையுடைய மலைகள்மேற் பெரு முகில்கள் திரண்டு மிடைந்து, ஒன்றோடொன்று பிணங்கி யோடிக் காற்றோடு கலந்து பெய்கின்ற விசும்பு காணுந்தோறும் துளி கலந்து பெய்யாநின்றன நின் கண்கள்.

(விரி.) இங்கு, 'விளிச் சொல்,' பொருள் விளங்கும் பொருட்டு வருவித்துக் கொள்ளப்பட்டது. கொண்மூ கூடி, நிரந்து, தலை பிணங்கி, ஓடி, கலந்து, வந்துறைக்கும் வானம், எனக் கூட்டுக. கண் வானங் காண்டோறுந் துளிகலந்து வீழ்தரும், என முடிக்க.

(ரு)

முல்லை நறுமல ரூதி யிருந்தும்பி
செல்சார் வுடையார்க் கினியவாய்,—நல்லாய்! மற்
றியாருமின் னெஞ்சினே மாகி யுறைவேமை
யீரு மிருண்மாலை வந்து.

[இதுவு மது.]

(பத.) நல்லாய் - நல்ல தலைவியே, இருள்மாலை - இருளோடு கூடிய மாலைக்காலமானது, வந்து - தோன்றி, இரும்தும்பி - பெரிய வண்டுகள், முல்லை நறுமலர் - முல்லைக் கொடியில் மலர்ந்து காணும் நல்ல மலர்களில், ஊதி - ரீங்காரஞ் செய்து, செல்சார்வு - செல்வாக்குக் காரணமான தலைவரை, உடையார்க்கு - உடைய பெண்டிர்க்கு, இனியவாய் - இன்பத்தைச் செய்வனவாக, யாரும் இல் - எவரையும் துணையாகக் கொண்டிராத, நெஞ்சினேம் ஆகி -

கவலைமிக்க மனத்தை உடையேமாகி, உறைவேமை - தங்கியிருக்கின்ற நம்மை, ஈரும் - வருத்தா நின்றது.

(ப - ரை.) நல்லாய்! இருந்தும்பி முல்லை நறுமலரை ஊதுதலாற் றமக்குச் செல்சார்வாகிய கொழுநரை யுடையார்க்கு இன்பத்தைச் செய்வனவாய், யாரும் துணையில்லாத நெஞ்சினேமாகி உறைவேமை இருண்மாலை வந்து ஈரா நின்றது.

(விரி.) செல்சார்வு - காரியவாகுபெயர். இனியவாய் - இனியவாக: எச்சத்திரிபு. மற்று - வினைமாற்றுப் பொருள். மாலை வந்து, தும்பி செல்சார்வுடையார்க்கு இனியவாக, உறைவேமை யீரும், எனமுடிக்க. (கூ)

தேரோன் மலைமறைந்த செக்கர்கொள் புன்மாலை
யாரான்பி னாய னுவந்தூதுஞ்—சீர்சால்
சிறுகுழ லோசை செறிதொடி! வேல்கொண்
டெறிவது போலு மெனக்கு.

[இதுவு மது.]

(பத.) செறிதொடி - கைகளில் நிறைந்த வளைகளைக் கொண்ட பெண்ணே! தேரோன் - ஒற்றையாழித் தேரவனாகிய சூரியன், மலை - மேற்கு மலைத்தொடரில், மறைந்த - மறைதலா லுண்டாகிய, செக்கர்கொள் - செவ்வானத்தைக் கொண்டுள்ள, புன்மாலை - சிறுபொழுதாகிய மாலைக்காலத்தே, ஆர் ஆன் பின் - அருமையான பசுக்கூட்டங்களின் பின்னாக வரும், ஆயன் - இடையன், உவந்து - மகிழ்ச்சி மிக்கவனாய், ஊதும் - ஊதும்படியான, சீர்சால் - சிறப்புமிக்க, சிறுகுழல் - புல்லாங் குழலினது, ஓசை - இனிய வோசையானது, எனக்கு———, வேல்கொண்டு - படைகொண்டு, எறிவதுபோலும் - தாக்குவதுபோல வருத்தத்தைத் தாரா நின்றது.

(ப-ரை.) தேரினையுடைய பகலவன் மலையின்கண் மறைந்த செக்கர் கொண்ட புன்மாலையின் கண் அரிய ஆனிரையின் பின்னே ஆயன் விரும்பி ஊதுஞ் சீரமைந்த சிறுகுழல் இன்னோசை, வேல் கொண்டு எறிவது போலாகின்றது செறிதொடி! எனக்கு.

(விரி.) செறிதொடி - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. மறைந்த - காரணப் பொருளில் வந்த பெய ரெச்சம். புன்மாலை - முல்லைத் திணையின் முதற்பொருள். ஆயன் - கருப்பொருள். இச்செய்யுளின் துறை மேற் கண்டவாறு தோழி கூற்றாகப் பழைய வுரைப் பிரதிகளில் காணப்படினும், எனக்கு என்னும் தொடர்கொண்டு, "தலைவி கூற்று," எனக் கருதக் கிடக்கின்றது. ஆகவே, மாலை கண்டு மயங்கிய தலைவி தோழிக்குச் சொல்லியது, என்பது போதரும். (எ)

பிரிந்தவர் மேனிபோற் புல்லென்ற வள்ளி
பொருந்தினர் மேனிபோற் பொற்பத்-திருந்திழாய்!
வானம் பொழியவும் வாரார்கொ லின்னாத
கானங் கடந்து சென்றார்.

[இதுவு மது.]

(பத.) திருந்து இழாய் - செப்பமான அணிகலன்களையணிந்துள்ள பெண்ணே!, பிரிந்தவர் - தலைவரைப் பிரிந்த தலைமகளிரின், மேனி போல் - வடிவம் போல, புல் என்ற - பொலிவின்றிக் காணப்பட்ட, வள்ளி - கொடிகள், பொருந்தினர் - தலைவரோடு கூடி வாழும் தலைமகளிரின், மேனிபோல் - வடிவம்போல, பொற்ப - பொலிவு பெறும்படி, வானம் பொழியவும் - மழை பெய்தலைச் செய்தும், இன்னாத - கொடிய, கானம் - காடுகளை, கடந்து - தாண்டி, சென்றார் - பிரிந்து சென்ற தலைவர், வாரார் கொல் - வரமாட்டாரா? (என்று தோழி தலைவியை வினவினள்.)

(ப-ரை.) துணைவரைப் பிரிந்தார் மேனிபோலப் புற்கென்ற வள்ளிகள், துணைவரோடு பொருந்தி யிருந்தார் மேனி போலப் பொலிவு தோன்றும் வகை வானம் பொழியவும் வாரார் கொல்லோ? திருந்திழாய்! இன்னாத கானங்களைக் கடந்து சென்றார்.

(விரி.) திருந்திழை - வினைத் தொகை யன்மொழி. இச் செய்யுளின் பொருட் போக்கும், வினவும் நேர்மையும் தலைவியின் கூற்றாமோ என ஐயுறச் செய்கின்றன. கொல் - ஐய வினாப் பொருள் தரு மிடைச்சொல். (அ)

வருவர் வயங்கிழாய் வாளொண்க ணீர்கொண்
டுருகி யுடன்றழிய வேண்டா—தெரிதியேற்
பைங்கொடி முல்லை யவிழரும் பீன்றன
வம்ப மழையுறக் கேட்டு.

[பருவமென் றழிந்த கிழத்தியைத் தோழி பருவமன்றென்று வற்புறுத்தியது.]

(பத.) வயங்கு இழாய் - மின்னுகின்ற அணிகலன்களைப்பூண்ட பெண்ணே! தெரிதியேல் - ஆராய்ந்து பார்ப்பாயாயின், வம்ப - காலமல்லாக் காலத்திற் புதிதாகத் தோன்றி நிலைத்திராத, மழை உற - மேகங்கள் கூடி முழங்க, கேட்டு - தெரிந்து, பைங்கொடி - பசிய கொடிகளையுடைய, முல்லை - முல்லைச் செடிகள், அவிழ் அரும்பு - மலரும் பருவத்தையுடைய மொட்டுக்களை, ஈன்றன - தோற்றுவித்தன, (என்பது தெளியலாகும்; ஆகவே,) வருவர் - கார்ப்பருவம் மெய்யாகவே வருமாயின் நமது தலைவர் தவறாது வந்து சேர்வர், (ஆகலின்,) வாள் - வாளாயுதத்தினை யொத்த, ஒண்கண் - நின் ஒளியினையுடைய கண்கள், நீர்கொண்டு - கண்ணீர் பெருக, உருகி - நீ வருந்தி, உடன்று - நொந்து, அழிய வேண்டா - துன்புற வேண்டுவதின்று. (என்று தோழி தலைவிக்குக் கூறினாள்.)

(ப-ரை.) விளங்கிய இழைகளையுடையாய்! நங்காதலர் பருவம் வந்தால் வருவர்; வாளினை யொக்கும் நின் கண்கள் நீர் கொள்ள நீயுருகி மாறுபட்டு அழியவேண்டா; ஆராய்வா யாயிற் றன்பருவ மல்லாமையின் நிலையில்லாத முழக்கங் கேட்டுப் பைங்கொடி முல்லைகள் அவிழரும்பு ஈன்றன காண்.

(விரி.) வயங்கிழை - வினைத் தொகையன் மொழி. அவிழரும்பு - வினைத் தொகை. கொண்டு - கொள்ள, எச்சத்திரிபு. பருவம் - கார் காலம். (கூ)

நூனவின்ற பாக! தேர் நொவ்விதாச் சென்றீக;
தேனவின்ற கானத் தெழினோக்கித்—தானவின்ற
கற்புத்தாள் வீழ்த்துக் கவுண்மிசைக் கையூன்றி
நிற்பா ணிலையுணர்கம் யாம்.

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.]

(பத.) நூல்நவின்ற - கலைப்பயிற்சி மிக்க, பாக - தேர்ப் பாகனே! தேன் நவின்ற - தேன்கூடுகள் மிகுந்த, கானம் - காட்டினது, எழில் நோக்கி - கார்ப் பெயலான் மிகுந்த அழகினைப் பார்ப் பதுபோல் என் வரவினை நோக்கிக் கொண்டு, தான் நவின்ற - தான் சிறு பருவத்திருந்தே பழகி மேற்கொண்ட, கற்புத்தாள் - கற்பாகிய அடைப்புக் கருவியினை, வீழ்த்து - மனத்தகத்தே சேர்த்து உயிரினைக் காப்பாற்றி, கவுள்மிசை - மோவாய் மீதே, கையூன்றி - தனது இடக்கையினைச் சேர்த்து வைத்து, நிற்பாள் - நிற்பவளாகிய தலைவியினது, நிலை - நிலைமையை, யாம் - நாம், உணர்கம் - சென்று உணர்வாம், (அதற்குத் தகுதியாக,) தேர் - நமது தேர், நொவ்விதுஆ - விரைவாக, சென்றீக - செல்வதாக. (என்று தலைவன் தேர்ப்பாகனை நோக்கிக் கூறினான்).

(ப-ரை.) நூல் பயின்ற பாகனே! நின்றேர் கடிதாகச் செல்வதாக; தேன் பயின்ற காட்டினது அழகை நோக்கித்

தான் பயின்ற கற்பென்னுநின்ற தாளினைச் செறித்து உயிர் காத்துக் கவுளின்மிசைக் கையூன்றி நிற்பாளது நிலைமையை நாம் சென்று அறிவாம்.

(விரி.) வினைமுற்றல் - சென்ற காரியத்தைச் செய்து முடித்தல். கேட்ப - கேட்கும்படி. உணர்கம் - முன்னிலையினையுளப் படுத்திய தன்மைப் பன்மை வினைமுற்று. ௰

முல்லை முற்றும்.

இரண்டாவது—குறிஞ்சி.

பொன்னிணர் வேங்கை கவினிய பூம்பொழிலு
ணன்மலை நாட னலம்புனைய—மென்முலையாய்!
போயின சின்னாள் புனத்து மறையினா
லேயினா ரின்றி யினிது.

[பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி
தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் செறிப்பறிவுறீஇயது.]

(பத.) மென்முலையாய் - மிருதுவான முலைகளையுடைய தலைவியே! நல்மலை - வளமிக்க மலைகள் நிறைந்த, நாடன் - நாட்டிற் குரியவனாகிய தலைவன், புனத்து - நமது தினைப்புனத்திற்குப் பக்கத்திலுள்ள, பொன் இணர் - பொன்போன்ற பூங்கொத்துக்களையுடைய, வேங்கை - வேங்கை மரங்கள் நிறைந்து, கவினிய - அழகு மிகுந்த, பூம்பொழிலுள் - பொலிவுமிக்க சோலையினிடத்திலே, மறையினால் - நீ செய்யுங் களவுப் புணர்ச்சியில், ஏயினார் - இடையூருகக் குறுக்கிட்டார், இன்றி - இல்லாமல், இனிது - இன்பமாக, நலம் புனைய - புணர்ச்சியின் மகிழ்ந்து நினது நலத்தைப் பாராட்டும்படி, சின்னாள் - சிலநாட்கள், போயின - நன்கே கழிந்தன. (இனி, எப்படியாமோ? அறியேம்! என்று தலைவிக்குத் தோழி கூறினாள்.)

(ப-ரை.) பொன் போன்ற பூங்கொத்தையுடைய வேங்கைகள் அழகு பெற்ற பூம்பொழிலின்கண் வந்து நன்மலை நாடன் நினது நலத்தினைப் புனையக் கழிந்தன சிலநாள்; புனத்தின்கட் களவினான் எதிர்ப்பட்டோரின்றி இடையூறின்றியே யினிதாக.

(விரி.) பகற்குறியாவது தோழி தலைவிக்குக் குறை இரந்து நின்ற தலைவன் செய்தி கூறிக் கூட்டத்திற்குத் தலைவியை இணங்குவித்த பிறகு, தினைப்புனத்தை யடுத்த சோலையினுள்ளே ஓரிடத்தைத் தலைவனுக்குக் குறிப்பிட்டுக் கூறித் தலைவியைக் கொண்டு சேர்க்குமிடமாம். சிறைப்புறம் - வேலியின் வெளிப்புறம். செறிப்பு - தலைவியை மனையிற் கொண்டு சேர்த்தல். அறிவுறீஇயது - தெரிவித்தது. நலம் புனைதல் - தலைவியின் உயர்ந்த தன்மைகளை எடுத்துச் சொல்லல். இது புணர்ச்சியின் பின் நிகழ்வதாகும். நாடன் பொழிலுள் மறையில் ஏயினுரின்றி, இனிது நலம் புனையச் சின்னுள் போயின. இற்செறிப்பால், இனி எப்படியாமோ? என முடிக்க. இது தலைவனுக்கு மறைமுகமாக இற்செறிப்பினைத் தோழி தெரிவித்ததாகும். குறிஞ்சி - குறிஞ்சியாகிய வொழுக்கம்: புணர்தலும், புணர்தனிமித்தமும். (கக)

மால்வரை வெற்ப! வணங்கு குரலேனல்
காவ லியற்கை யொழிந்தேம்யாந்—தூவருவி
பூக்கண் கழூஉம் புறவிற்ருய்ப் பொன்விளையும்
பாக்க மிதுவெம் மிடம்.

[பகற்குறி வந்து பெயர்கின்ற தலைமகனைக் கண்ணுற்றுத் தோழி செறிப்பறிவுறீஇயது.]

(பத.) மால் - பெரிய, வரை - சிகரங்களை யுடைய, வெற்ப - மலைநாட்டுத் தலைவனே, யாம் - நாங்கள், வணங்கு - முதிர்தலால் வளைந்த, குரல் - கதிர்களையுடைய, ஏனல் - தினைப்புனத்தை, காவல் - காத்துக்கொண் டிருக்கும்படியான, இயற்கை - இயல்பான வாழ்க்கையை, ஒழிந்தேம் - விட்டுச் செயற்கையான இல்லில் வாழும் வாழ்க்கையை மேற்கொண்டோம், தூஅருவி - நீர்த் துளிகளைத் தூவும்படியான நீர்வீழ்ச்சிகள், பூக்கண் - பூக்களின் உள்ளிடங்களை, கழூஉம் - கழுவிக் கொண்டு செல்லும் படியான, புறவிற்ருய் - காட்டினைச் சூழக் கொண்டதாய்,

பொன் விளையும் - பொருட் செல்வத்தான் மிகுந்த, பாக்கம் இது - இப்பாக்கம், எம்மிடம் - எமது இல்லம் அமைந்த இடமாகும். (எம்மைக் காண வேண்டுதியேல், நாளை முதல் அவ்விடம் வருவாயாக, என்று தோழி தலைவனுக்குச் சொன்னாள்.)

(ப-ரை.) பெரிய குவடுகளையுடைய வெற்பனே! விளைத்த கதிர்களையுடைய பசுந் தினையைக் காத்தல் யாம் ஒழிந்தேம்; தூவருவிகள் பூவின் கண்களைக் கழுவுகின்ற காட்டினை யுடைத்தாய்ப் பொன் விளையும் இப்பாக்கம் எம்முடைய இடமாதலான், நீ இங்கே வரக்கூடின், வருவாயாக.

(விரி.) கண்ணுறல் - காணல். பாக்கம் - ஊர். கழூஉம் - சொல்லிசை யளபெடை. தலைவனும், தலைவியுங் கூடிக் களித்துப் பிரியுங்கால், தோழி தலைவனையணுகித் தம திற்செறிப்பினை நேர் முகமாய்க் கூறியதாகு மிச்செய்யுள். "ஒழிவேம்," எனற் பாலது, "ஒழிந்தேம்," என வந்தது தெளிவு பற்றி வந்த காலவழுவமைதி. (கஉ)

கானக நாடன் கலவானென் றோளென்று
மானமர் கண்ணாய்! மயங்கனீ;—நானங்
கலந்திழியு நன்மலைமேல் வாலருவி யாடப்
புலம்பு மகன்றுநில் லா.

[சிறைப்புறத்தானாகத் தலைமகனை யியற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்படமொழிந்தது.]

(பத.) மான் அமர் - மான் போன்று மருளும், கண்ணாய் - கண்களையுடைய தோழியே! கானகம் - குறிஞ்சி நிலம் நிறைந்த, நாடன் - நாட்டிற்குரியனாகிய தலைவன், என் தோள் - இற் செறிப்புறும் என் தோள்களில், கலவான் - சேருதலாகிய புணர்ச்சியைச் செய்யான், என்று - என நினைத்து, நீ மயங்கல் - நீ வருத்தமுறாதிருப்பாயாக, நானம் - பலவகை வாசனைப் பொருள்கள், கலந்து - கலக்கப் பெற்று, இழியும் - நமதூர்க்குப் பக்கத்தே செல்

லும், நல்மலைமேல் - தலைவனது நாட்டைச் சார்ந்த நல்லமலையி விருந்து வரும்படியான, வால் அருவி - வெள்ளிய நீர் வீழ்ச்சியில், ஆட - நாம் சென்று மூழ்கி வருவதால், புலம்பும் - தலைவனைச் சேராமையானுண்டாகும் வருத்தங்களும், அகன்று - நீங்கி, நில்லா- ஒடும். (என்று தலைவி தோழிக்குச் சொன்னாள்.)

(ப-ரை.) கானக நாடன் என்றோளைப் 'புணராளென்று சொல்லி, மான் போன்ற மதர்த்த கண்ணினை யுடையாய்! அறிவு கெடா தொழிவாயாக; பல நறு விரைகளையுங் கலந்து இழியாநின்ற நன் மலையின்கண் உள்ள வாலிய அருவியை யாட என்றோள்களின்கட் புலம்பும் நீங்கி நில்லாது.

(விரி.) தலைவனது நாட்டுமலை யென்பார் 'நன்மலை,' என்றார். புலம்பு - பால்பகாவஃறிணைப் பெயர். தலைவனுக்குத் தலைவியின் இற்செறிப்புணர்த்தித் தலைவிபால் சென்ற தோழி, தம்மைச் சிறைப்புறமாக நின்று நோக்குந் தலைவனுக்குக் கேட்கும்படியாக, "தலைவன், இனி வறும்பூத் துறக்கும் வண்டு போல்வனோ?" என்று தலைவியினிடங் கூற, தலைவி மறுமொழியாகக் கூறிய துறை யாகுமிது. இயற்பட மொழிதல் - உயர்வு படக் கூறல். இயற் பழித்தல் - குறைவுபடக் கூறல். இங்குத் தலைவி, தலைவனது புணர்ச்சி கிட்டாவிடினும், அவனுட் டருவியின் சேர்க்கை கிட்டுதல் சாலும் என இயற்பட மொழிந்து, தலைவனது பொருளுக் குரியளாமாறு தெளிக. (கரு)

புனைபூந் தழையல்குற் பொன்னன்னாய்! சாரற்
றினைகாத் திருந்தேம்யா மாக—வினைவாய்த்து
மாவினவு வார்போல வந்தவர் நம்மாட்டுத்
தாம்வினவ லுற்றதொன் றுண்டு.

[தோழி தலைமகட்கு மெலிதாகச் சொல்லிக்
குறை நயப்புக் கூறியது.]

(பத.) புனை - தொடுக்கப்பட்ட, பூ - மலர்களோடு கூடிய, தழை - குழைகளால் அலங்கரிக்கப்பட்ட, அல்குல் - நிதம்பத்தினை யுடைய, பொன் அன்னாய் - இலக்குமியை யொத்த தலைவியே! சாரல் - இம்மலைப் பக்கத்திலுள்ள, தினை - நமது தினைப்புனத்தை, யாம் - நாங்கள், காத்து - (இன்று காலையில்) காவல் செய்து, இருந்தேம் ஆக - இருக்க, (அப்பொழுது,) வினை வாய்த்து - வேட்டமாடுதலை மேற்கொண்டு, மாவினவுவார் போல - தாம் தப்ப விட்ட விலங்கொன்றினைத் தேடி வருவார் போன்று, வந்தவர் - வருதலைச் செய்தவராகிய அவர், (இப்பொழுது - நண் பகல்) நம் மாட்டு - நம்மிடத்தில், வினவல் உற்றது - கேட்கத் தொடங்கிய தாகிய, ஒன்று - பிறிதொன்று, உண்டு - உளதாயிருக்கின்றது. (என்று தலைவிக்குத் தோழி கூறினாள்.)

(ப-ரை.) செய்யப்பட்ட பூந்தழைகளான் அணியப் பட்ட அல்குலினையுடைய பொன்னன்னாய்! மலைச்சாரலின் கட் டினையைக் காத்து நாம் இருந்தேமாக, வினையை வாய்க் கச் செய்து ஒருமா வினவுவார் போல வந்தாரொருவர் நம் மாட்டுத் தாம் வினவலுற்ற பிறிதொன்று உண்டு.

(விரி.) ஒன்று - பிறிதொன்று. அஃதாவது புணர்ச்சி விருப் பம். சாரல் - மலைப்பக்கம். தினை - தினைப்புனம்: தானியாகுபெயர். தாம் - அசைநிலை. குறை நயப்பு - தலைவன் தனது குறையாகிய வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கும்படி தோழியை வேண்டிக் கொள்வது. மெலிதாக - நயமாக. (கசு)

வேங்கை நறுமலர் வெற்பிடை யாங்கொய்து
மாந்தளிர் மேனி வியர்ப்பமற்—றாங்கெனைத்தும்
பாய்ந்தருவி யாடினே மாகப் பணிமொழிக்குச்
சேந்தனவாஞ் சேயரிக்கண் டாம்.

[பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தாய் கேட்டதற்கு மறுமாற்றஞ் சொல்லுவாள் போலப் படைத்து மொழி கிளவியான் வரைவு கடாயது.]

(பத.) யாம் - நாங்கள், வெற்புஇடை - அம்மலையிடத்தேயுள்ள, வேங்கை - வேங்கைமரத்திற் பூத்துள்ள, நறுமலர் - மணமிக்க பூக்களை, கொய்து - பறித்தலாகிய காரியத்தைச் செய்தபடியினாலே, மாந்தளிர் - மாவினது தளிரை யொத்த, மேனி - எங்கள் உடல், வியர்ப்ப - வியர்வையைப் பொழிய, (அதனால்,) ஆங்கு - அம்மலையிடத்தே யுள்ள, எனைத்தும் அருவி - எல்லா நீர் வீழ்ச்சிகளிலும், பாய்ந்து ஆடினேம் - குதித்து விளையாடினோம், ஆக - ஆகவே, பணி மொழிக்கு - மெல்லிய சொற்களையுடைய தலைவிக்கு, சேயரி - சிவந்த ரேகைகள் படர்ந்த, கண் - கண்கள், சேந்தன - சிவப்பு நிறங் கொண்டன. (என்று தோழி செவிலித்தாய்க்குக் கூறினாள்.)

(ப-ரை.) வெற்பின்கண் வேங்கை மலரையுங் கொய்து நின்மகள் மாந்தளிர் மேனி வியர்த்தலான் அவ்விடத்து எல்லா வருவியும் பாய்ந்தாடினேமாகப் பணிமொழியையுடையாட்குச் சேயரிக்கண் டாம் சிவந்தன காண்.

(விரி.) மறுமாற்றம் - விடை. தாய் - செவிலி. படைத்துமொழிகிளவி - புதிதாக வொன்றைக் கற்பித்துக் கூறுவது. வரைவு கடாதல் - மணம் புரிந்து கொள்ளும்படி தூண்டுதல். இடை - ஏழனுருபு. கொய்து - காரணப் பொருளில் வந்த வினையெச்சம். பணிமொழி - பண்புத் தொகை யன்மொழி. தலைவியை இல்லிற்கு அழைத்துச் செல்லத் தினைப்புனம் வந்திருந்த செவிலித்தாய் பகற்குறிக்கண் சென்று வந்த தலைவியைத் தழுவி நோக்கி, அவள் அதுவரை எங்குச் சென்றிருந்தாள் என்றும், அவள் கண்கள் அப்படிச் சிவந்திருக்கக் காரணம் யாதென்றும் தோழியை வினவினாள். அவ்வேளை தலைவியின் செலவினை நோக்கிக் கொண்டே பின் வந்த தலைமகன் புணர்ச்சி நிகழ்ந்த சோலைக்கும், தினைப்புனத்

திற்கு மிடையேயுள்ள வேலியின் புறமாக நின்று நோக்கிக் கொண் டிருந்தனன். தோழி, செவிலித்தாயின் வினுக்களுக்கு மறு மொழி யாகவும், தலைவன், தலைவியின் நிலையினை யறிந்து வரைந்து கொள் ளும்படியாகவும் தலைவனுக்குக் கேட்கும்படியாகப் புணர்ச்சியான் நேர்ந்த கண் சிவப்புக்குப் புதிதாக மற்றொரு காரணங் கற்பித்துக் கூறலானுள். "சேயரிக்கண்," என்ற கருத்தினைக் கூர்ந்து நோக்குக. (கரு)

கொடுவரி வேங்கை பிழைத்துக் கோட்பட்டு
மடிசெவி வேழ மிரீஇ—அடியோசை
அஞ்சி யொதுங்கு மதருள்ளி யாரிருட்
டுஞ்சா சுடர்த்தொடி கண்.

[இரவுக்குறி வந்து பெயருந் தலைமகனைக் கண்ணுற்று நின்ற தோழி வரைவு கடாயது.]

(பத.) சுடர்த் தொடி - ஒளிமிக்கவளை யணிந்த தலைவியினது, கண் - கண்கள், கொடுவரி - வளைந்த வரிகளையுடைய, வேங்கை - பெரும் புலியினாலே, கோள்பட்டு - பிடிக்கப்பட்டு, பிழைத்து - அப் பிடியினின்றும் தப்பியோடி, மடி செவி - மடிந்த காதுகளை யுடைய, வேழம்-யானையானது, இரீஇ-பின்வாங்கி, அடியோசை - தன்னடையாலுண்டாகும் ஓசையானது, (புலிக்குக் கேட்குமோ என்று,) அஞ்சி - பயந்து, ஒதுங்கும் - மெதுவாக நடக்கும் படி யான, அதர் - வழியானது, உள்ளி - (நீ திரும்பிச் செல்லும் பாதையாகு மென்று) நினைத்து, (அதனால்,) ஆர் இருள் - நேற்றிரவு முழுவதும், துஞ்சா - உறக்கத்தை மேற் கொள்ளா வாயின. (ஆக வின், நீ விரைவில் தலைவியைக் கடி மணம் புரிந்து காப்பாற்றுவா யாக, என்று தோழி தலைவனிடத்திற் கூறினாள்.)

(ப-ரை.) கொடுவரி வேங்கையாற் கோட்பட்டுப் பிழைத்து மடிந்த செவியையுடைய வேழம் பிரிந்து, தன்

னடி யோசையைப் புலி கேட்குமென்று அஞ்சி, மெலல நடக்கும் வழியை நினைந்து, கங்குலின்கட் சுடர்த்தொடியை யுடையாள் கண் துயிலா.

(விரி.) இரவுக்குறி - தலைவனும் தலைவியும் இரவில் சந்தித் துக் கூடுமிடம். இது தலைவியின் வீட்டினை யடுத்திருப்பதாம். வேழம் இரீஇ, அஞ்சி, ஒதுங்கும் அதர், என முடிக்க. சுடர்த் தொடி கண், ஆரிருளில் அதருள்ளித்துஞ்சா, எனக் கொண்டு கூட்டுக. இரவுக் குறி வந்து பெயருங்கால் வரைவு கடாய தெற் றுக் கெனின், தலைவர்க்கு வழியிடை விழிப்பும், வரைதலில் நினைப் பும் வேண்டியென்க. புணர்ச்சிக்கு முற்கூறின், அம் மகிழ்வான் தலைவன் மறத்தலா மென்பது தோழி கருத்தாம். (கசு)

மஞ்சிவர் சோலை வளமலை நன்னாட!
எஞ்சாது நீவருதி யென்றெண்ணி—அஞ்சித்
திருவொடுங்கு மென்சாயற் றேங்கோதை மாத
ருருவொடுங்கு முள்ளுருகி நின்று.

[இதுவு மது.]

(பத.) மஞ்சு - மேகங்கள், இவர் - படர்ந்தேறிச் செல்லும்படி யான, சோலை - பூஞ்சோலைகளையுடைய, வள மலை - வளப்ப மிக்க மலைகள் நிறைந்த, நல் நாட - நல்ல நாட்டிற்குரிய தலைவனே, திரு - இலக்குமியும், ஒடுங்கும் - பின்வாங்கும்படியான, மெல் சாயல் - நல்ல அழகினையுடைய, தேம்கோதை - வாசனை மிகுந்த மலர்மாலை யணிந்த தலைவியானவள், நீ எஞ்சாது - நீ நாடோறும் இரவின்கண் தவறாமல், வருதி - கொடுமை மிக்க வழியினைக் கடந்து வருகின்றாய், என்று எண்ணி - என்று நினைத்து, அஞ்சி - உனக்கு என்ன தீங்கு நேருமோ என்று பயந்து, உள் உருகி நின்று - மனவருத்த மிக்கு, மாதர் - அழகிய, உரு ஒடுங்கும் - மேனி வாட்ட

முறலாயினள். (ஆகலின், நீ நின் வரவினை நிறுத்தி, மணம் புரிவ தற்கு வேண்டிய வழியினை நாடுவாயாக, என்று தோழி தலைவ னிடத்திற் கூறினாள்.)

(ப-ரை.) முகில் படரா நின்ற சோலையையுடைய வள மலை நாடனே! ஒருநாள் ஒழியாது இரவின்கண் நீ வாரா நின்றாய் என்று எண்ணித் திருவொடுங்கு மென்சாயற் றேங் கோதை மாதர் அஞ்சி யுள்ளுருகி நின்று தன் மேனி மெலியாநின்றாள்.

(விரி.) உருகி நிற்றல் - ஒருசொல்: வருந்தல். வருதி - முன் னிலை யொருமை நிகழ்கால வினைமுற்று. நன்னாட! தேங்கோதை எண்ணி, அஞ்சி, உள்ளுருகி நின்று, மாத ருருவொடுங்கும், என முடிக்க. (கஎ)

எறிந்தெமர் தாமுழுத வீர்ங்குர லேனன்
மறந்துங் கிளியினமும் வாரா—கறங்கருவி
மாமலை நாட! மடமொழி தன்கேண்மை
நீமறவ னெஞ்சத்துக் கொண்டு.

[தோழி செறிப்பறிவுறீஇத் தலைமகனை வரைவு கடாயது.]

(பத.) கறங்கு - ஒலிக்கின்ற, அருவி - நீர்வீழ்ச்சிகளையுடைய, மா - பெரிய, மலைநாட - மலைநாட்டிற்குரிய தலைவனே! எமர் - எம் மவர்களாகிய குறவர்கள், எறிந்து - மரஞ்செடி கொடிகளை வெட்டி ஒழுங்கு படுத்தி, உழுத - உழவுத் தொழிலைச் செய்து பயிரிட்ட, ஈர்ம் குரல் - குளிர்ந்த கதிர்களையுடைய, ஏனல் - தினைப்புனத்திற்கு, (இனிமேல்,) கிளியினமும் - கிளிக்கூட்டங்களும் நாங்களும், மறந் தும் - நினைவின்றியும், வாரா - வருதலைச் செய்யோம், மடமொழி - மடப்பக்குணம் பொருந்திய சொற்களையுடைய தலைவியினது, கேண்மை - நட்பினை, நீ நெஞ்சத்துக் கொண்டு-நீ மனத்திடையே

வைத்து, மறவல் - மறவாது வாழ்வாயாக. (என்று தோழி தலைவனிடத்திற் சொன்னாள்.)

(ப-ரை.) காடெறிந்து எமர்தாமுழுத ஈர்ங்குரல் ஏனலின்கண் மறந்தாயினுங் கிளியினமும் நாங்களும் வாரோம்; கறங் கருவியினையுடைய மாமலை நாடனே! மடமொழியோடு நீ கொண்ட கேண்மையை நின்னெஞ்சத்துக் கொண்டு மறவாயாக.

(விரி.) மறந்தும் - உம்மை இழிவு சிறப்புப் பொருளது. கிளியினமும் - உம்மை சொல்லெச்சப் பொருளது. செவிலியுடன் தலைமகள் வீட்டிற்குச் செல்ல, தோழி சிறைப்புறத்தே நின்ற தலைமகன்பால் வந்து தமது இற்செறிப்பினைத் தெரிவித்துத் தலைவியை மணந்து வாழவேண்டுமென அறிவுறுத்தியதாகு மிச் செய்யுள். குறவர் மரங்களடர்ந்த மலைச்சாரலினைத் தீமூட்டி யழித்துப் பின், அச்சாம்பரினையே எருவாக்கி உழுது தினைப்பயிர் செய்தல் மரபாதலின், "எறிந்தெமர்தாமுழுத ஈர்ங்குரலேனல்," என்றார். தாம், தன் - அசைநிலைகள். (௧அ)

நெடுமலை நன்னாட! நீள்வே றுணையாக்
கடுவிசை வாலருவி நீந்தி—நடுவிரு
ளின்னா வதர்வர வீர்ங்கோதை மாதரா
ளென்னாவா ளென்னுமென் னெஞ்சு.

[தோழி இரவுக் குறியின்கண் நெறிவிலக்கி வரைவு கடாயது.]

(பத.) நெடுமலை - நீண்டுயர்ந்த மலைகள் மிகுந்த, நல்நாட - நல்ல நாட்டிற்குரிய தலைவனே, நீள் வேல் - நீண்ட வேலாயுதத்தை, துணையா - உதவியாகக் கொண்டு, கடுவிசை - மிக்க விரைவாக ஓடும்படியான, வால் அருவி - வெள்ளிய நீர்வீழ்ச்சிகளை, நடுஇருள் -

பாதி இரவிலே, நீந்தி - கடந்து, இன்னா - இடையூறுகள் பல வற்றைக் கொண்டு துன்பஞ் செய்யும்படியான, அதர் வரவு - வழி யிலே நீ வருதலைக் கண்டால், ஈர்ம்கோதை - குளிர்ந்த பூமாலை யணிந்த, மாதராள் - பெண்ணாகிய தலைவி, என் ஆவாள் - எவ்வித மாகப் பொறுப்பள், என்னும் - என்று வருந்தா நிற்கின்றது, என் நெஞ்சு - எனது மனம். (என்று தோழி தலைவனை நோக்கிக் கூறினள்.)

(ப-ரை.) நெடுமலை நன்னாடனே! நீள்வேலை துணை யாகக் கடிய விசையையுடைய, வாலருவியை நீந்தி, நடுவிரு ளின்கண் இன்னாத வழியின்கண் நீவர, ஈர்ங் கோதை மாத ராள் எப் பெற்றி யாவாளோ என்று தடுமாறுநிற்கும் என் னெஞ்சு.

(விரி.) இரவுக்குறி - தலைவனும் தலைவியும் இராக்காலத்தே தம்முள் எதிர்ப்பட்டுக் கூடுமிடமாம். இது தலைவியின் இல்லினை யடுத்த தோப்பின்கண் உள்ளதாம். நெறிவிலக்கல் - வழியின தருமை கூறி அவ்வழி வராதிருக்க வேண்டல். (கக)

வெறிகமழ் வெற்பனென் மெய்ந்நீர்மை கொண்ட
தறியாண்மற் றன்னே! அணங்கணங்கிற் றென்று
மறியீர்த் துதிரந்தூய், வேலற் றரீஇ
வெறியோ டலம்வரும் யாய்.

[தலைமகள் தோழிக்கு அறத்தோடு நின்று வெறிவிலக்க வேண்டும் உள்ளத்தாளாய்ச் சொல்லியது.]

(பத.) யாய் - நமது அன்னையாகிய செவிலி, வெறி - வாசனை, கமழ் - மணக்கின்ற, வெற்பன் - மலைநாட்டுத் தலைவன், என் - எனது, மெய் நீர்மை - உடலின் இயல்பாந்தன்மையை, கொண் டது - (களவுப்புணர்ச்சியால்) பற்றிக்கொண்டதாகிய நிலையினை,

அறியாள் - தெரியாதவளாய், அன்னே - ஐயோ, அணங்கு - தெய்வமானது, அணங்கிற்று - என்னைத் துன்புறுத்தியது, என்று - என நினைத்து, வேலன் - வேலாயுதத்தைக் கையிற் கொண்டு மருளாடுபவனாகிய பூசாரியை, தரீஇ - வரவழைத்து, மறி ஈர்த்து - ஆட்டுக் குட்டியினைப் பலி கொடுத்து, உதிரம் - அதனது குருதியை, தூய் - நாற்புறமுந்தெளித்து, வெறி ஓடு - முருகனுக்குப் பூசையிடுதலாகிய வெறியாடுதலில் ஈடுபட்டு, அலம்வரும் - வருந்தா நிற்கின்றாள். (நீ அதனைத் தடுத்து, உண்மையைச் செவிலிக்கு உணர்த்துவாயாக, என்று தலைவி தோழியினிடம் கூறினாள்.)

(ப-ரை.) விரைகமழாநின்ற வெற்பன் எனது மெய்யின்கண் உள்ள நீர்மையைக்கொண்டது அறியாளாய், அந்தோ! தெய்வம் என்னை வருத்திற்று என்று வேலனைத் தந்து மறியை யறுத்து உதிரத்தைத் தூவி வெறியோடே வருந்தாநின்றாள் அன்னை.

(விரி.) ஆய் - தாய். ஆய் எனற்பாலது, 'யாய்,' என மருவியது. அறியாள் - முற்றெச்சம். அன்னோ - இரக்கக் குறிப்பிடைச் சொல். மற்று - அசைநிலை. தரீஇ - சொல்லிசை யளபெடை. வெறியோடு - உருபுமயக்கம். செவிலி, தலைவிக்கு வளர்ப்புத் தாயாகவும், பெற்ற தாய்க்குத் தோழியாகவும், தன் தோழிக்குப் பெற்ற தாயாகவும், அமைவது மரபாகலான், 'யாய்,' எனப்பட்டாள். அறத்தொடு நிற்றல் - தவறுதலான கருத்தொடு காரியங்களை நடத்த விடாமல் உண்மையினை எடுத்துக் கூறி விடுவது. வெறி விலக்கல் - முருகனுக்குப் பூசை யிடுதல் தேவையில்லாத வொன்றெனத் தோழி முதலியோர் உண்மை கூறித் தடுத்தல். (உய)

குறிஞ்சி முற்றும்.

மூன்ருவது—மருதம்.

கொண்டுழிப் பண்டம் விலையொரீஇக் கொற்சேரி
நுண்டுளைத் துன்னூசி விற்பாரி—னென்ருனும்
வேறல்லை பாண! வியலூரன் வாய்மொழியைத்
தேற வெமக்குரைப்பாய் நீ.

[பாணற்குத் தலைமகள் வாயின் மறுத்தது.]

(பத.) பாண - பாணனே! வியல் ஊரன் - பெரிய மருதநிலத்தூர்த் தலைவன், வாய் மொழியை - சொல்லி அனுப்பிய மொழிகளை, தேற - தெளிவாக, எமக்கு - எங்களுக்கு, உரைப்பாய் நீ - உரைக்கின்ற நீ, பண்டம் - பொருளை, கொண்டு உழி - கொள்முதல் செய்தவிடத்து, விலை ஒரீஇ - ஏற்பட்ட விலையை வேறுபடுத்து மிகுத்தி, கொல் சேரி - கொல்லர்கள் தெருவின்கண், நுண் துளை - நுட்பமான துளையினையுடைய, துன் ஊசி - ஆடை தைக்கும் ஊசியினை, விற்பாரின் - விற்கின்ற வணிகரைக் காட்டிலும், ஒன்ருனும் - ஒரு விதத்திலும், வேறு அல்லை - வேறுபாடு கொண்டுள்ளாயல்லை. (என்று தலைவி பாணனிடத்திற் கூறினுள்.)

(ப-ரை.) பண்டங் கொண்ட விலையை வேறுபடுத்துக் கொற்சேரியின்கண் நுண்ணிய துளையையுடைய ஊசியை விற்றுத் திரிவாரின் யாதானும் வேறல்ல; பாண! வியலூரன் வாய்மொழியைத் தெளிய எமக்கு உரைக்கின்ற நீ.

(விரி.) பாணன் - யாழ்கொண்டு பாட்டுப் பாடித் தலைவனை மகிழ்விக்கும் தலைவனின் ஏவலன். வாயில் - தூது. மருதம் - ஊடுதலும், ஊடுதனிமித்தமுமாகிய ஒழுக்கம். கொல்லர் தெருவில்

ஊசி விற்பதுபோல், என்ற பழமொழி இங்குக் கையாளப்பட்டுளது. துன்னல் - தைத்தல். (உக)

போதார்வண் டூதும் புனல்வய லூரற்குத்
தூதாய்த் திரிதரும் பாண்மகனே !—நீதா
னறிவயர்ந் தெம்மில்லு ளென்செய்ய வந்தாய்
நெறியதுகா ணெங்கைய ரிற்கு.

[இதுவு மது.]

(பத.) போது - மலர்களில், ஆர் - மொய்க்கின்ற, வண்டு - வண்டுகள், ஊதும் - ரீங்காரஞ் செய்கின்ற, புனல் வயல் - நீர்வள மிக்க நன்செய் நிலங்களையுடைய, ஊரற்கு - மருதநிலத்தூர்த் தலைவனுக்கு, தூது ஆய் - தூதுவனாக, திரிதரும் - அலைகின்ற, பாண்மகனே - பாணனே! நீதான் - நீ, அறிவு - அறிவானது, அயர்ந்து - கெட்டுப் போய், எம் இல்லுள் - எங்களுடைய மனைக்கு, என் செய்ய வந்தாய்-எதற்காக வந்தாய், எங்கையர்-எமது தங்கைமாராகிய (தலைவனால் விரும்பப்பட்ட) மங்கைமாரினது, இற்கு - மனைக்கு, நெறி - வழி, அது காண் - அது என்று தெரிந்து அங்குச் செல்வாயாக. (என்று தலைவி பாணனிடங் கூறினாள்.)

(ப-ரை.) மலர்களை நுகராநின்ற வண்டுகள் ஊதும் புனல் வயலூரற்குத் தூதாய் உழல்கின்ற பாண் மகனே! நீதான் அறிவு கலங்கி எங்கள் மனையுள் என்செய்ய வந்தாய்? எங்கையர் மனைக்கு வழி அதுகாண்.

(விரி.) தான் - அசைநிலை. எங்கையர் - எமது தங்கையர். தலைவி, தன் தலைவனின் விருப்பிற்குரிய மங்கையர் தன் உடன் பிறப்பினராவர் என்ற முறை பற்றி, 'எங்கையர்,' என்றாள். இம் முறைமை இக்காலத்து சக்களத்தி (=சகக்களத்தி) என வழக்கிலுளது. காண் - முன்னிலை யசை யெனினுமாம். (உஉ)

யாண ரகல்வய லூர னருளுதல்
பாண! பரிந்துரைக்க வேண்டுமோ—மாண
வறிவ தறியு மறிவினர் கேண்மை
நெறியே யுரையாதோ மற்று.

[இதுவு மது.]

(பத.) பாண - பாணனே! யாணர் - புதுவருவாயினையுடைய, அகல்-விசாலமான, வயல்ஊரன்-மருதநிலத்தூர்த் தலைவன், அருளுதல் - எம்மிடத்து மிகுந்த அன்புடையனா யிருத்தலை, பரிந்து - மிகுந்த உரிமை பாராட்டி, உரைக்கவேண்டுமோ - நீ சொல்ல வேண்டிய இன்றியமையா நிலை எதேனுமுண்டோ, (யாதுமின்று,) மாண - நன்றாக, அறிவது - தெரியவேண்டியதனை, அறியும் - தெரிந்துகொண்டிருக்கும், அறிவினர் - அறிவாளிகள், கேண்மை - கைக்கொள்ளும் நட்பினது, நெறியே - போக்கே, உரையாதோ - அவர்தம் மிகுந்த அன்புடைமையினைத் தெரிவிக்காதோ? (நன்கு தெரிவிக்கும், என்று தலைவி பாணனிடம் கூறினாள்.)

(ப-ரை.) வளமையுடைய அகல்வயலூரன் எமக்கு அருளுடையன் என்பதனைப் பாணனே! நீ காதலித்து உரைக்க வேண்டுமோ? மாட்சிப்பட அறியக் கடவதனை அறியும் அறிவினையுடையார் செய்யும் நட்பு நெறியை அவர் அருளுடைமையே உரையாதோ?

(விரி.) மற்று - அசைநிலை. ஓகாரங்கள் எதிர்மறை வினாப் பொருளன.

(உரு)

கோலச் சிறுகுருகின் குத்தஞ்சி யீர்வாளை
நீலத்துப் புக்கொளிக்கு மூரற்கு—மேலெலாஞ்
சார்தற்குச் சந்தனச்சாந் தாயினே மிப்பருவங்
காரத்தின் வெய்யவென் றோள்.

[இதுவு மது.]

(பத.) (பாணனே!) கோலம் - அழகிய, சிறு குருகின் - சிறிய நாரையினது, குத்து அஞ்சி - கொத்துதலுக்குப் பயந்து, ஈர்வாளை - குளிர்ந்த வாளை மீனுனது, நீலத்து - நீலோற்பல மலர்க் கூட்டத்தினிடத்தே, புக்கு - புகுந்து, ஒளிக்கும் - மறைந்து கொள்ளும், ஊரற்கு - மருத நிலத்தூர்த் தலைவனுக்கு, மேல் எலாம் - முன்பெல்லாம், சார்தற்கு - புணர்தற்கண், சந்தனச் சாந்து - சந்தனக் குழம்பினைப்போன்று, ஆயினேம் - யாம் இருந்தோம், இப் பருவம் - இவ் வேளை, என் தோள் - எனது தோள்கள், காரத்தின் - புண்ணிற்கு இடும் காரத்தினைப் போல, வெய்ய - கொடியவாயின. (என்று தலைவி பாணனிடம் பகர்ந்தாள்.)

(ப-ரை.) அழகிய சிறுகுருகின் குத்தினை யஞ்சிக் குளிர்ந்த வாளை நீல மலரின்கட் புக்கு ஒளிக்கும் ஊரினையுடையாற்குப் பண்டெல்லாம் புணர்தற்குச் சந்தனக் குழம்பாயினேம்; இக்காலம் புண்ணிற்கு இடும் காரம்போல வெய்யவாம் எம்முடைய தோள்.

(விரி.) பழைய வுரையின் கருத்தினை மேற்கொண்டு, "பாணனே!" என்ற விளி வரவழைக்கப் பட்டது. ஆயினும், மேல், "அழலவிழ்," எனத் தொடங்குஞ் செய்யுள்போல், இதுவும் விளி யொன்று மின்றி வருதலின், அதற்குக் கூறிய கருத்தினையே இதற்குங் காணல் பொருந்தும். இங்கு மருத நிலத்தின் நீர்வளனைச் சிறப்பித்துக் கூறிய நேர்மை நெஞ்சகத்திருத்த வேண்டிய வொன்றாம். (உச)

அழலவிழ் தாமரை யாய்வய லூரன்
விழைதகு மார்ப முறுநோய்—விழையிற்
குழலுங் குடுமியென் பாலகன் கூறு
மழலைவாய்க் கட்டுரை யால்.

[வாயில் வேண்டிச் சென்றார்க்குத் தலைமகள் வாயின் மறுத்தது.]

(பத.) அழல் - தழலினைப்போல, அவிழ் - மலரும்படியான, தாமரை - செந்தாமரை மலர்கள் நிரம்பிய, ஆய் - மருத (நிலவளங்களை) ஆராய்ந்தறிதற்கிடமான, வயல் ஊரன் - நன்செய் நிலங்கள் மிக்க ஊர்க்குத் தலைவனது, விழைதகு - கண்டாரால் விரும்பப்படும், மார்பம் - மார்பானது, குழலும் - (மென்மையினாலே) குழன்று விழும்படியான, குடுமி - சிகையினையுடைய, என் பாலகன் - என் சேய், கூறும் - பேசும்படியான, மழலைவாய் - குதலைவாயினின்றும் வெளிப்படும், கட்டுரையால் - சிறு மொழிகளால், விழையின் - என்னை விரும்பித் தலைவன் புணருமாயின், நோய் உறும் - துன்புறும். (என்று தலைவி கூறினாள்.)

(ப-ரை.) அழல் போல அவிழுந் தாமரைகளையுடைய ஆய் வயலூரனுடைய கண்டார் விழையப்பட்ட மார்பம் துன்புறுநிற்கும்; குழலும் குடுமி யென் பாலகன் கூறும் மழலைவாய்க் கட்டுரையான் எம்மை விரும்பிப் புணருமாயின்.

(விரி.) மார்பம், கட்டுரையால், விழையின், நோய் உறும், எனக் கொண்டு கூட்டுக. நினது மகன் கூறும் மழலைச் சொற்களால் தலைவன் மகிழ்ந்து நின்னைக் கூட விரும்புகின்றனன், என்ற வாயில்கட்கு விடையாகத் தலைவி கூறியதாகு மிச் செய்யுள். வாயில் வேண்டல் - தூதாகச் செல்ல விரும்பல். (உரு)

பெய்வளைக் கையாய்! பெருநகை யாகின்றே
செய்வய லூரன் வதுவை விழவியம்பக்
கைபுனை தேரேறிச் செல்வானைச் சென்றிவ
னெய்தி யிடருற்ற வாறு.

[புதல்வனை முனிந்து தலைமகண் மறுத்தாளைப் போலத் தோழிக்கு வாயில் நேர்ந்தது.]

(பத.) பெய் - அணியப் பெற்ற, வளைக்கையாய் - வளையல்களைக் கொண்ட கைகளையுடைய தோழியே! செய் - திருத்தப்

பெற்ற, வயல் ஊரன் - மருத நிலத்து நன்செய்கள் சூழ்ந்த ஊர்க்குத் தலைவன், வதுவை விழவு - பரத்தையர் புதுமண விழாக் கொண்டாடும் பொருட்டு, இயம்ப - முழவினை ஒலிக்க, (அதனைக் கேட்டு,) கைபுனை - அணி செய்யப்பட்ட, தேர் ஏறி - தேரின்மீது அமர்ந்து, (பரத்தையர்பாற் செல்ல,) செல்வானை - அங்ஙனஞ் செல்கின்ற தலைவனை, இவன் - இந்த எனது புதல்வன், சென்று - எதிர் சென்று, எய்தி - காணுதலால், இடர் உற்ற ஆறு-தலைவன் பரத்தையரின் புதுமணம் பொருந்தப் பெறாது துன்புற்ற நிலை, பெருநகையாகின்று - எனக்கு மிகுந்த நகைப்பினை யுண்டாக்குகின்றது. (என்று தலைவி தோழிக்குக் கூறித் தலைவனை யேற்றுக் கொள்ளலாயினள்.)

(ப-ரை.) பெய்வளையினையுடைய கையாய்! எனக்குப் பெரிய நகையாகாநின்றது; செய்த வயல்களையுடைய ஊரன், பரத்தையர் புதுமணங்களின் உள்ள முழவு ஒலித்தலாற் கைபுனை தேரேறிச் செல்வானை இப்புதல்வன் கண்டு சென்று எய்த, அவ்வூரன் புதுமணம் புணரப் பெறாது இடருற்றவாறு.

(விரி.) எய்தி - எய்த: எச்சத்திரிபு. பெருநகையாகின்று, என்பது வெளிக்கு எள்ளி மறுத்தல்போற் காணப்படினும் உள்ளூறும் விருப்பினைக் குறிப்பாகத் தெரிவித்தலால், 'மறுத்தாளைப் போல வாயினேர்ந்தது,' என்றார். முனிதல் - சினத்தல். (உசு)

தண்வய லூரற் புலக்குந் தகையமோ
நுண்ணறல் போல நுணங்கிய வைங்கூந்தல்
வெண்மரற் போல நிறந்திரிந்து வேறாய
வண்ண முடையேமற் றியாம்.

[வாயில் வேண்டிச் சென்றார்க்குத் தலைமகள் வாயின் மறுத்தது.]

(பத.) யாம் - நாம், நுண் அறல் - நுட்பமான கருமணலினை, போல - போன்று, நுணங்கிய - நுட்பமாகிய, ஐங் கூந்தல் - எமது ஐவகைப்பட்ட கூந்தலானது, வெண் மரல் போல - வெள்ளை மரலைப் போன்று, நிறம் திரிந்து - நிறம் வேறு படுதலால், வேறு ஆய - மாறுபட்ட, வண்ணம் உடையேம் - தன்மையைப் பெற்றிருக்கின்றோம், (ஆதலால்,) தண்வயல் - குளிர்ந்த நன்செய் நிலங்கள் சூழ்ந்த, ஊரன் - மருதநிலத்தூர்த் தலைவனோடு, புலக்கும் - ஊடுதலைச் செய்யும்படியான, தகையமோ - தகுதியினைப் பெற்றுளோமோ? (எனத் தலைவி வாயிலாக வந்தார்மாட்டு வினவினாள்.)

(ப-ரை.) தண்வயலூரனை ஊடுந்தகையமோ? நுண்ணிய அறல் மணற் போலும் நுணுகிய ஐவகைப்பட்ட கூந்தல் வெள்ளை மரற்போலத் தன்னிறந்திரிந்து வேறுபட்ட நிறத்தை யுடையேம் ஆதலான்.

(விரி.) கூந்தல் ஐவகையாமாறு:—குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி. மற்று - அசை நிலை. ஓகாரம் - எதிர்மறை வினைப் பொருள். இச் செய்யுளின் கருத்தாகிய, 'வாயின் மறுத்தற்கும்,' 'ஊடுந்தகைய மன்று,' என்ற பொருட் போக்கிற்கும் மாறுபாடு காணுதலின், "தண்வயலூரற் கலக்குந் தகையமோ?" என்று பாடத்தினை மாற்றி யோதுவது நன்றெனத் தோன்றுகின்றது. தலைவன் பிரிவால் தலைவி வாடி மாறுபட்டாளாதலின், "கூந்தல், திரிந்து, வேறாய வண்ண முடையேம்," எனக் கூறலுற்றாளென்க.

(உஎ)

ஒல்லென் றொலிக்கு மொலிபுன லூரற்கு [லென்னை
வல்லென்ற தென்னெஞ்சம் வாட்கண்ணாய்!—நில்
தேக்கற்றுங் கென்மகன் றானிற்ப வென்னானு
நோக்கான்றே றூர்ந்தது கண்டு.

[தலைமகள் தோழிக்கு வாயின் மறுத்தது.]

(பத.) வாள் கண்ணாய் - வாள் போன்ற கண்ணையுடைய தோழியே! (முன்னொருகால்) என் மகன் - என்னுடைய புதல்வன், ஆங்கு - தெருவிலே (தேர்மீது சென்ற தன் தந்தையாகிய தலைவனைக் கண்டு,) ஏக்கற்று - விரும்பி, நிற்ப - பார்த்துக் கொண்டு நிற்க, (அந்நிலையினைக் கண்டும்,) நில் என்றது-(பாகனைத் தேரோட்டுதலினின்றும் சற்று) நிற்பாயாக என்று சொல்லாதே, என்னுனும்- சிறிதும், நோக்கான்-(என் புதல்வனைத் திரும்பியும்) பாராதே, தேர் ஊர்ந்தது-தேரினைச் செலுத்திப் பரத்தையர் மனைக்குப் போயதனை, கண்டு-(யான்) அறிந்ததனால், என் நெஞ்சம்-என் மனம், ஒல் என்று- ஒல் என்ற ஒலியினைக் கொண்டு, ஒலிக்கும் - ஆரவாரிக்கும், ஒலி புனல் - ஒலி மிக்க நீர்வளம் பொருந்திய, ஊரற்கு-மருத நிலத்தூர்த் தலைவன்மாட்டு, வல் என்றது-(இரக்கங் காட்டாத) வன்கண்மையைக் கொள்ளலாயிற்று. (என்று தலைவி தோழியினிடங் கூறினாள்.)

(ப-ரை.) ஒலி புனலையுடைத்தாய்ப் பிறவோசையானும் ஒல்லென்றொலிக்கும் ஊரற்கு என்னெஞ்சம் நெகிழாது வலிதாயிற்று; வாட் கண்ணாய்! புதல்வன் தன்னை விரும்பி நிற்கக் கண்டு வைத்துப் பாகனை நில்லென்று சொல்லாதே என் புதல்வனையும் பின் பாராதே தேரூர்ந்து பரத்தையர் மனைக்குச் சென்றது கண்டு.

(விரி.) நோக்கான் - முற்றெச்சம். கண்டு - காரணப் பொருளில் வந்த வினையெச்சம். ஊர்ந்தது கண்டு, என்னெஞ்சம் வல்லென்றது, என முடிக்க. தான் - அசைநிலை. (உஅ)

ஒல்லென் றொலிபுன லூரன் வியன்மார்பம்
புல்லேன்யா னென்பேன் புனையிழையாய்!—புல்லே
னெனக்கோர் குறிப்பு முடையனோ வூரன்
றனக்கேவல் செய்தொழுகு வேன்.

[ஆற்றாமையே வாயிலாகப் புக்க தலைமகன் புணர்ந்து நீங்கிய பின்பு சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

(பத.) புனை இழையாய்-அழகிய அணிகலன்களைப் பூண்டுள்ள தோழியே! ஒல் என் - ஒல் என்று ஒலிக்கும்படியான, ஒலி புனல் ஊரன் - ஆரவாரமிக்க நீர் சூழ்ந்த மருத நிலத்தூர்த் தலைவனது, வியல் மார்பம் - அகன்ற மார்பினை, யான் - நான், புல்லேன் என் பேன் - (அவனைக் காணுவதற்கு முன்) தழுவேன் என்று நினைத் திருப்பேன், (ஆயினும் யான்,) ஊரன் தனக்கு - அவ்வூரனாகிய தலைவனுக்கு, ஏவல் செய்து - ஊழியம் புரிந்து, ஒழுகுவேன்-நடக் கக் கூடிய தன்மையுடையேனாதலால், புல்லேன் - (அவனைக் கண்ட பின்பு) தழுவேனாதற்கு, எனக்கு - எனக்கெனப் பெற்ற, ஓர் குறிப்பும் - ஒரு கருமத்தையும், உடையனோ - பெற்றுள்ளேனோ? (அவனைக் காணுங்காலே காதல் வலைப்பட்டுச் செயலிழப்பேன், என்று தோழியிடந் தலைவி கூறினாள்.)

(ப-ரை.) ஒலி புனலை யுடைத்தாய்ப் பிறவோசையான் ஒல்லென்னும் ஊரனுடைய அகன்ற மார்பத்தினை யான் முயங்கேன் என்று சொல்லி அவனைக் காணுதமுன் நினைத் திருப்பேன்; புனையிழையாய்! அவனைக் கண்டபின் முயங்கேனாதற்கு எனக்கெனப் பெற்ற கருமம் உடை யேனோ? ஊரன்றனக்கு ஏவல் செய்து ஒழுகுவேன் ஆதலான்.

(விரி.) சென்ற-தலைவி பக்கலிற் போன. ஆற்ருமை - காதன் மிகுதி. (உக)

குளிரும் பருவத்தே யாயினுந் தென்றல்
வளியெறியின் மெய்யிற் கினிதாம்—ஒளியிழாய்!
ஊடி யிருப்பினு மூர னறுமேனி
கூட லினிதா மெனக்கு.

[இதுவு மது.]

(பத.) ஒளி இழாய் - அழகுமிக்க அணிகலன்களை யணிந் துள்ள தோழியே! குளிரும் பருவத்தே ஆயினும் - குளிர்காற்று

வீசும் மாரிகாலமானாலும், தென்றல் வளி - தென்றற் காற்று, எறியின் - வீசினால், மெய்யிற்கு - நமது உடலுக்கு, இனிதாம் - இன்பமாகும், (அதுபோல,) ஊடி இருப்பினும் - நான் தலைவனோடு மாறுபட்டிருந்தாலும், ஊரன் - அம்மருதநிலத்தூர்த் தலைவனது, நறுமேனி - நல்லவடிவத்துடன், கூடல் - புணர்தலானது, எனக்கு இனிதாம் - எனக்கு இன்பத்தைத் தாராநின்றது. (என்று தலைவி தோழியினிடங் கூறினாள்.)

(ப - ரை.) குளிருங் காலத்தே யாயினும் தென்றற் காற்று எறியின் உடம்பிற்கு இனிதாம்; அதுபோல, ஒளியிழாய்! யான் அவனைப் புலந்திருந்தேன் ஆயினும், அவ்வூரன் அழகிய நாற்றத்தினையுடைய மேனியைக் கூடுதல் இனிதாம் எனக்கு.

(விரி.) குளிரும் பருவம் - கூதிர்காலம். தென்றல்வளி - தெற்குப்புறத்தே யிருந்து வீசுங்காற்று. (௩௰)

மருதம் முற்றும்.

நான்காவது—பாலை.

உதிரந் துவரிய வேங்கை யுகிர்போ
லெதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க-எதிருநர்க்
கின்பம் பயந்த விளவேனில் காண்டொறுந்
துன்பங் கலந்தழியு நெஞ்சு.

[பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

(பத.) உதிரம் - குருதியானது, துவரிய - சார்ந்து பிடித்த, வேங்கை - பெரும்புலியின், உகிர்போல் - நகங்களைப் போல, எதிரி - பருவத்தோடு பொருந்தி, முருக்கு - முருக்கமரங்கள், அரும்ப - செவ்விய மொட்டுகளை வெளிவிட, ஈர்ம் தண் கார் - மிகவும் குளிர்ந்த மேகங்கள், நீங்க - விலகிவிட, எதிருநர்க்கு - (தலைவனும் தலைவியுமாய்) எதிர்ப்பட்டுக் கூடினார்க்கு, இன்பம் பயந்த - நன்மையைச் செய்த, இளவேனில் - சித்திரையும் வைகாசியுமாகிய இளவேனிற் காலத்தை, காண்தொறும் - என் கண்கள் காணும் வேளைகளிலெல்லாம், நெஞ்சு - என் மனம், துன்பம் கலந்து - துன்பப்பட்டு, அழியும் - வருந்தாநிற்கும். (என்று தலைவி தோழியிடங் கூறினாள்.)

(ப-ரை.) உதிரத்தை யளைந்து துவரிய புலியினது உகிர்போலப் பருவத்தை யெதிர்ந்து முருக்குக்கள் அரும்ப, ஈர்ந்தண்முகில் நீங்க, காதலர் தம்முட் டலைப்பட்டார்க்கு இன்பத்தைக் கொடுத்த இளவேனிலைக் காணுந்தொறும் துன்பத்தோடு புணர்ந்து அழியாநின்றது என்னெஞ்சு.

(விரி.) அரும்ப, நீங்க, பயந்த இளவேனில், எனக் கூட்டுக. இளவேனில் காண்டொறும் நெஞ்சு அழியும், என முடிக்க. பருவம் இளவேனிற் பருவம். பாலை - பிரிதலும், பிரிதனிமித்தமுமாகிய ஒழுக்கம்.

(௩க)

விலங்கல் விளங்கிழாய்! செல்வாரோ வல்ல
ரழற்பட் டசைந்த பிடியை — யெழிற்களிறு
கற்சுனைச்சேற்றிடைச் சின்னீரைக்கையாற்கொண்
டுச்சி யொழுக்குஞ் சுரம்.

[தலைமகனது பிரிவுக்குறிப்பறிந் தாற்றளாய தலைமகளைத்
தோழி ஆற்றுவித்தது.]

(பத.) விளங்கு இழாய் - விளக்கமான அணிகலன்களை யணிந்த தலைவியே! அழல் பட்டு - காட்டுத் தீயினிடத்திலே அகப்பட்டு, அசைந்த - வருந்திய, பிடியை - பெண்யானையை, எழில் களிறு - அதனது அழகிய ஆண்யானையானது, கல் சுனை - மலைச் சுனையினது, சேறு இடை - சேற்றோடு கூடிய, சில் நீரை - சிறிதாகிய நீரினை, கையால் கொண்டு - தன் கையினாலே வாரி யெடுத்து, உச்சி - (அப் பெண் யானையினது) தலை உச்சியிலே, ஒழுக்கும் - பெய்தற்கிடமான, சுரம் - பாலை நிலவழியிலே, செல்வாரோ - (தலைவர்) செல்ல வல்லரோ, அல்லர் - செல்லமாட்டார், விலங்கல் - (ஆகலின், அவர் செலவினைத்) தடுக்காதிருப்பாயாக.

(ப-ரை.) அவர் செலவினை விலங்கா தொழிக; விளங்கிய இழையினை யுடையாய்! செல்ல மாட்டார்; காட்டழற் பட்டு வருந்திய பிடியினை அதனது எழிற்களிறு கற்சுனைச் சேற்றிடையுள்ள சின்னீரைத் தன் கையாலே கொண்டு அப் பிடியின் உச்சியின்கண் ஒழுக்குஞ் சுரத்தை.

(விரி.) ஆற்றுதல் - பொறுத்தல். சுரம் - பாலைநிலவழி. களிறு சின்னீரைக் கொண்டு, அசைந்த பிடியின் உச்சி யொழுக்குஞ் சுரம் செல்வாரோ, அல்லர், விலங்கல், என முடிக்க. (௩௨)

பாவையும் பந்தும் பவளவாய்ப் பைங்கிளியு
மாயமு மொன்று மிவைநினையாள்—பால்போலு

மாய்ந்த மொழியினுள் செல்லுங்கொல் காதலன்பின்
காய்ந்து கதிர்தெறூஉங் காடு.

[மகட் போக்கிய நற்றாய் கவன்று சொல்லியது.]

(பத.) பால் போலும் - பாலினைப் போன்ற, ஆய்ந்த மொழியினுள் - ஆராய்ந்தமைந்த மொழிகளையுடைய என் மகள், காதலன் பின் - தன் தலைவன் பின்னாலே, கதிர் - ஞாயிறு, காய்ந்து - வெப்பத்தை மிகுத்து, தெறூஉம் - சுடுகின்ற, காடு - காட்டு வழியிலே, பாவையும் - விளையாட்டுக்குரிய பொம்மையும், பந்தும் - பந்தும், பவளவாய் - பவளம் போன்ற வாயினைக் கொண்ட, பைங்கிளியும் - பச்சைக் கிளியும், ஆயமும் - தோழிகள் கூட்டமும், இவை - ஆகிய இவைகளில், ஒன்றும் - ஒன்றினையுங் கூட, நினையாள் - நினைக்காதவளாய், செல்லும் கொல் - செல்வாளோ! (என்று நற்றாய் தனக்குள்ளே கவலைப்பட்டவளாய்ச் சொல்லிக் கொண்டாள்.)

(ப-ரை.) பாவையையும், பந்தையும், பவளம்போன்ற வாயையுடைய பசுங்கிளியையும், ஆயத்தையும் இவற்றை ஒன்றும் நினையாளாய், பால்போலும் சின்மொழியை யுடையாள், தன் காதலன் பின் செல்லுங் கொல்லோ! கனன்று பகலோன் சுடுகின்ற காட்டினை.

(விரி.) நற்றாய் - தலைவியின் பெற்ற தாய். கவலல் - வருந்தல். கொல் - ஐயப் பொருள் கொண்ட விடைச் சொல். மொழியினுள் காதலன் பின், காட்டிலே, நினையாள், செல்லுங் கொல்! என முடிக்க. நற்றாய் மகளின்முதுக்குறைவினை அறியாளாய் இங்ஙனங் கூறினாளென்க. தெறூஉம்-இன்னிசை யளபெடை.(ருரு)

கோட்டமை வல்விற் கொலைபிரியா வன்கண்ண
ராட்டிவிட் டாறலைக்கு மத்தம் பலநீந்தி

வேட்டு முனைவயிற் சேறிரோ வைய! நீர்
வாட்டடங்கண் மாதரை நீத்து.

[தோழி தலைமகனைச் செலவழுங்கியது.]

(பத.) ஐய-தலைவனே! நீர்-தாம், கோடு - வளைகின்ற, அமை-மூங்கிலாலாகிய, வல் - வலிமையான, வில் - வில்லினாலே, கொலை-கொல்லுதலை, பிரியா - விட்டுநீங்காத, வன்கண்ணர் - வன்கண்மை மிக்க மறவர்கள், ஆட்டிவிட்டு - கொள்ளையடித்து ஓட்டி, ஆறு - வழியின்கண், அலைக்கும் - மக்களை வருத்தும்படியான, அத்தம் - கடத்தற்கரியவழிகள், பல-பலவற்றையும், நீந்தி-கடந்து, வாள்-வாளினைப் போன்ற, தடம் கண் - பெரிய கண்களையுடைய, மாதரை-தலைவியினை, நீத்து-விட்டுப்பிரிந்து, வேட்டம்-வேட்டை யாடுதற்குரிய, முனைவயில் - (கொடுமை மிக்க) காட்டினிடத்திலே, சேறிரோ - செல்லமாட்டுவிரோ? (என்று தோழி தலைவனை வினவினள்.)

(ப-ரை.) கோட்டுகின்ற மூங்கில்விற்கொலையை இடையருத வன்கண்மையையுடையார் ஆறலைத்து ஓட்டி வழியின் கண்நின்று அலைக்குங் கடறுகள் பலவற்றையு நீந்தி, வேட்டினை யுடைய வெம்முனையின்கட் செல்வீரோ? ஐய! நீர் வாட்டடங்கண் மாதரைத் துறந்து.

(விரி.) செலவு அழுங்கல் - செல்லுதலினின்றும் தவிர்ந்து நின்று வருந்தல். ஆட்டிவிடல் - ஓட்டல்; திசைச்சொல்: மலைநாட்டது. நீர் மாதரை நீத்து, பலநீந்தி, முனைவயிற் சேறிரோ? என முடிக்க. (௫௪)

கொடுவி லெயினர்தங் கொல்படையால் வீழ்ந்த
தடிநிண மாந்திய பேஎய் - நடுகல்
விரிநிழற் கண்படுக்கும் வெங்கான மென்பர்
பொருள்புரிந்தார் போய சுரம்.

[தலைமகன் பொருள்வயிற் பிரிந்தகாலத்து ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவலென்பது பட மொழிந்தது.]

(பத.) பொருள் புரிந்தார் - பொருள் தேடுதலை விரும்பியவ ராகிய தலைவர், போய - சென்ற, சுரம் - பாலைநிலத்து அருவழி யானது, கொடு - வளைந்த, வில் - வில்லினையுடைய, எயினர் - வேட்டுவர், தம் - தமது, கொல்படையான் - கொல்லுதற்குரிய படையினாலே, வீழ்ந்த - மடிந்த, தடி - தசையையும், நிணம் - கொழுப்பையும், மாந்திய - தின்ற, பேய் - பேய்கள், நடுகல் - (போரிலே மடிந்தாரின் பெயர் வரைந்து) நடப்பட்ட கல்லினாலே, விரி - தோன்றுகின்ற, நிழல் - அரு நிழலில், கண்படுக்கும் - உறங்குதற்குரிய, வெம் கானம் - கொடிய காட்டின் கண்ணது, என்பர் - என்று சொல்வர். (என்று தலைவி தோழியினிடங் கூறினாள்.)

(ப-ரை.) கோட்டிய வில்லினையுடைய வேட்டுவர் தங் கொல்படையானே வீழ்ந்த தசையையும் நிணத்தையுந் தின்ற பேய்கள், போரின்கட் பட்டார் பெயர் பொறித்து நட்ட கல்லின் விரிநிழற்றுயிலும் வெய்ய காடென்று சொல்லுவர்; தோழி! பொருள் விரும்பினார் போகிய கடறு.

(விரி.) பேஎய் - இசைநிறையளபெடை. ஆற்றாளென - தலைவி பொறுக்கமாட்டாள் என்று. ஆற்றுவல் - பொறுப்பேன். பொருள் புரிந்தார் போய சுரம் வெங்கான மென்பர், என முடிக்க. தலைவர் போய சுரம் வெங்கானம் ஆதலின், செல்லாது மீள்வர், என்பது தலைவி கருத்து. (ருரு)

கடிதோடும் வெண்டேரை நீராமென் றெண்ணிப்
பிடியோ டொருங்கோடித் தாள்பிணங்கி வீழும்
வெடியோடும் வெங்கானஞ் சேர்வார்கொ னல்லாய்!
தொடியோடி வீழத் துறந்து.

[பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள்
உடன்படாது சொல்லியது.]

(பத.) நல்லாய் - நல்ல தோழியே! தொடி - (எனது கையிலணிந்துள்ள) வளையல், ஓடி - கழன்று சென்று, வீழ - விழும்படி, துறந்து - (என் காதலர் என்னைவிட்டு) நீங்கி, கடிது ஓடும் - விரைந்து செல்லும், வெண்தேரை - கானல் நீரை, நீர்ஆம் - தண்ணீராகும், என்று எண்ணி - என நினைத்து, பிடி ஒடு - (ஆண் யானைகள்) பெண்யானைகளுடனே, ஒருங்கு - ஒன்றாகச் சேர்ந்து, ஓடி - சென்று, தாள் - அடியானது, பிணங்கி - ஓய்ந்து, வீழும் - விழும்படியான, வெடி - வெடிப்பு, ஓடும் - மிகுந்த, வெம் கானம் - கொடிய காட்டு வழியிலே, சேர்வார் கொல் - சேர்வாரோ? (சேரமாட்டார், என்று தலைவி தோழியிடங் கூறினாள்.)

(ப-ரை.) விரைந்தோடும் பேய்த்தேரை நீராமென்று கருதிக் களிறுகள் பிடியோடே கூட ஓடித் தாள் ஓய்ந்து பிணங்கி வீழும் பிளவோடிய வெங்கானத்தைச் சென்று நங்காதலர் சேர்வார்கொல்லோ? நல்லாய்! நங் கையிற்றொடியோடிவீழத் துறந்து.

(விரி.) உடன்படல் - மேற்கொளல். கொல் - வினைப்பொருள். பிரிவுணர்த்தல் - தலைவன் பிரிவினைத் தலைவிக்குத் தோழி தெரிவித்தல். பேய்த்தேர் - கானல் நீர். (௩௬)

தோழியர் சூழத் துறைமுன்றி லாடுங்கால்
வீழ்பவள் போலத் தளருங்கா—ளூழாது
கல்லத ரத்தத்தைக் காதலன் பின்போதல்
வல்லவோ மாதர் நடை.

[உடன்போய தலைமகட்கு நற்றாய் கவன்றுரைத்தது.]

(பத.) தோழியர் - பாங்கிமார்கள், சூழ-நாற்புறமுஞ் சூழும்படி, துறைமுன்றில் - முற்றமாகிய துறையினிடத்திலே, ஆடுங்கால் -

விளையாடும் பொழுதிலும், வீழ்பவள்போல - விழுந்துவிடுவாள் போன்று, தளரும் கால் - தளர்ச்சியுறும் கால்களையுடைய, மாதர் - காதலையுடைய என் மகளது, நடை - நடையானது, கல் அதர் - கற்கள் நிரம்பிய வழியாகிய, அத்தத்தை - அருஞ்சுரத்தில், காதலன் பின் - தன் தலைவன் பின்னாலே, தாழாது - ஓய்ந்து போகாமல், போதல் - செல்லுதலை, வல்லவோ - மாட்டுமோ? (என்று நற்றாய் கவன்று உரைத்தாள்.)

(ப-ரை.) தோழியர் சுற்ற முற்றத்திற்றுறையின் விளையாடும்பொழுதும் வீழ்பவளேபோலத் தளருங்கால்கள் ஓய்ந்து தாழாதே கல்வழியையுடைய அத்தத்துத் தன் கொழுநன்பின் போதலை வல்லவோ? காதலையுடையாள் நடை.

(விரி.) அத்தத்தை - உருபு மயக்கம். (ங எ)

சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்
பிணமா னினிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தி னூச்சுஞ் சுரமென்பர் காதல
ருள்ளம் படர்ந்த நெறி.

[பிரிவின்கண் ஆற்றளாயின தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.]

(பத.) காதலர் - நமது தலைவர், உள்ளம் - தமது மனத்தினாலே, படர்ந்த - விரும்பிச் சென்ற, நெறி - வழியானது, கலைமா - ஆண்மான், சுனைவாய் - ஆங்குள்ள சுனையினது, சிறு நீரை - சிறிதாகிய தண்ணீரை, எய்தாது - (பெண்மான்) குடிக்கப் போதாது, என்று எண்ணி - என நினைத்தும், தன் பிணைமான் - தன்னுடைய பெண்மான், இனிது - நன்றாக, உண்ண - குடிக்க, வேண்டி - விரும்பியும், கள்ளத்தின் - பொய்யாக, ஊச்சும் - (குடிப்பதுபோல்) உறிஞ்சும், சுரம் என்பர் - பாலை நிலவழியாகுமென்று சொல்லுவர். (ஆகலின், தலைவன் அச் செயலைக் கண்டு திரும்புவன் என்று தலைவியைத் தோழி ஆற்றுவித்தாள்.)

(ப-ரை.) சுனையின்கண் உள்ள சிறிய நீரைப் பிணைக்கு உண்ண நிரம்பாது என்று எண்ணிப் பிணைமான் இனிதாக உண்ண வேண்டி, கலையாகிய மாத் தனது கள்ளத்தினானே பொய்யே உறிஞ்சும் சுரமென்று சொல்லுவர்; நங்காதலர் தம் அகத்தினாற் போயின நெறி.

(விரி.) நெறி(யினை) ஊச்சும் சுரமென்பர், என முடிக்க. சிறு நீரை, கலைமா, எண்ணி, வேண்டி, ஊச்சும் சுரம், எனக்கொண்டு கூட்டுக. (௩அ)

மடவைகா ணன்னெஞ்சே! மாண்பொருண்மாட் டோடப்
புடைபெயர் போழ்தத்து மாற்றாள்—படர்கூர்ந்து
விம்மி யுயிர்க்கும் விளங்கிழையா ளாற்றுமோ
நம்மிற் பிரிந்த விடத்து.

[தலைமகன் பொருள்வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.]

(பத.) நல் நெஞ்சே - நல்ல மனமே! புடை பெயர் - (நாம் தழுவிச்) சிறிது விலகுகின்ற, போழ்தத்தும் - காலத்திலும், ஆற்றாள் - பொறுக்க மாட்டாதவளாய், படர் கூர்ந்து-துன்பம் மிகுந்து, விம்மி - எங்கி, உயிர்க்கும் - பெருமூச்சு விடும்படியான, விளங்கிழையாள் - ஒளிமிக்க அணிகலன்களை யணிந்த தலைவி, மாண் பொருள் மாட்டு - சிறந்த பொருள் தேடுதலின்கண், ஓட - நீ (நெஞ்சு) செல்ல, (அதனால்,) நம்மில் - நம்மினின்றும், பிரிந்த இடத்து - நீங்கியக்கால், ஆற்றுமோ - பொறுப்பாளோ? (பொறுக்காள்,) மடவைகாண்-நீ (அதனைச் சிறிதும்) அறிந்தாயல்லை. (என்று தலைவன் தன்னெஞ்சினோடு சொல்லிக் கொண்டான்.)

(ப-ரை.) அறியாய்காண், மிக்க நெஞ்சே! மாட்சிமைப் பட்ட பொருளின்மாட்டுச் சேறலான், முயங்கி நாம் புடை பெயருங் காலத்தும் ஆற்றமாட்டாளாய்த் துன்பமிக்கு

விம்மி உயிராநின்ற விளங்கிழையாள் ஆற்ற வல்லளோ? நம்மை நீங்கிய விடத்து.

(விரி.) விளங்கிழையாள் நெஞ்சு ஓட, நம்மிற் பிரிந்த விடத்து ஆற்றுமோ? என முடிக்க. ஆற்ருள், கூர்ந்து, விம்மி, உயிர்க்கும் விளங்கிழையாள் எனக் கூட்டுக. காண்-முன்னிலையசை. வலித்தல் - இன்றியமையாதென நினைத்தல். அழுங்கல் - வருந்தல்.

இன்றல்க லீர்ம்படையு ளீர்ங்கோதை தோடுணையா
நன்கு வதிந்தனை நன்னெஞ்சே! நாளைநாங்
குன்றத ரத்த மிறந்து தமியமா
யென்கொலோ சேக்கு மிடம்.

[இதுவு மது.]

(பத.) நல் நெஞ்சே - நல்ல மனமே! இன்று - இற்றை நாளினது, அல்கல் - இரவிலே, ஈர்ம் - குளிர்ந்த, படையுள் - படுக்கையினிடத்தே, ஈர்ம் கோதை - குளிர்ந்த மாலையை யுடையாள், தோள் - தோள்கள், துணையா - உதவியாக இருக்க, நன்கு - நன்ருக, வதிந்தனை - தங்கி யுள்ளாய், நாளை - அடுத்த நாள், நாம் - யாம், குன்று - சிறு மலைகளுக்கூடே செல்லும், அதர் - அத்தமாகிய, அத்தம்-அருநெறிவழியே, தமியமாய்-துணையாதுமின்றி, இறந்து-சென்று, சேக்கும் இடம் - தங்குமிடம், என் கொலோ - யாதாகுமோ? (என்று தலைவன் தனக்குத்தானே வினவி வருந்தினன்.)

(ப-ரை.) இன்று இரவின்கட் குளிர்ந்த சேர்க்கையுள் ஈர்ங்கோதையை யுடையாள் தோள் நமக்குத் துணையாக மிகவுந் தங்கினை; நன்னெஞ்சே! இவ் வின்பத்தைவிட்டு நாளையிரவின்கண் யாம் மலைவழியே யிறந்து தமியேமாய் எவ்விடந் தங்குமிடம்?

(விரி.) கொல், ஓ - அசைநிலைப் பொருள். அல்கல் - இராக்காலம்.

பாலை முற்றும். (ருய)

ஐந்தாவது—நெய்தல்.

தெண்கடற் சேர்ப்பன் பிரியப் புலம்படைந்
தொண்டடங்கண் டுஞ்சற்க வொள்ளிழாய்!—நண்படைந்த
சேவலுந் தன்னருகிற் சேக்குமா லென்கொலோ
பூந்தலை யன்றில் புலம்பு.

[அல்ல குறிப்பட்ட தலைமகற்குச் சொல்லுவாளாய்த் தோழி தலைமகட்குச் சொல்லியது.]

(பத.) ஒள் இழாய் - ஒளியினைக் கொண்ட அணிகலன்களை யணிந்த தலைவியே! தெள்கடல் - தெளிந்த கடலினை யடுத்த, சேர்ப்பன் - துறைமுகத்தையுடைய தலைவன், பிரிய - (அல்ல குறியால் இரவுக் குறியிடை நின்னை) நெருங்காது செல்ல (அதனால்,) புலம்பு அடைந்து - நீ தனிமை யடைந்ததனால், ஒள் தடம் கண் - நின் ஒளிகொண்ட பெரிய கண்கள், துஞ்சற்க - உறங்கா தொழியினும் ஒழியட்டும், (ஆனால்,) நண்பு அடைந்த - காதல் மிகக் கொண்டுள்ள, சேவலும் - ஆண் அன்றிற் பறவையும், தன் அருகில் - தனக்குப் பக்கத்தே, சேக்கும் - தங்கி யிருக்கின்றது, (அப்படி யிருக்க,) பூந்தலை - சிவந்த பூவினைப்போன்ற சூட்டினைக்கொண்ட, அன்றில் - பெட்டை யன்றிற் பறவை, புலம்பு - வருந்துதல், என்கொலோ - என்ன காரணமோ? (என்று தோழி தலைமகளை வினவினாள்.)

(ப-ரை.) தெண்கடற் சேர்ப்பன் பிரிதலாற் றனிமையை யடைந்து நின்னுடைய ஒள்ளியகண் துயிலாதொழிக; ஒள்ளிய இழைகளை யுடையாய்! நண்பினை அடைந்த சேவலும் தன் னருகே உறையாநின்ற தாதலான், என்னை கொல்லோ? செம்பூப் போலுஞ் சூட்டினையுடைய பெடை யன்றில் புலம்புதல்.

ஐந்திணையைம்பது.

(விரி.) தலைவன் இரவுக் குறியின்கண் வந்தவுடன் தன் வரவினைத் தலைவிக்கும் தோழிக்கும் தெரிவிப்பான் வேண்டிப் பூஞ்சோலைமரங்களில் கூடித் தங்கியிருக்கும் பறவைக் கூட்டங்களையெழுப்பிவிட்டாவது, குளக்கரையிலுள்ள தென்னை முதலியவற்றின் காய்களைப் பறித்து நீரிலிட்டாவது ஒலியுண்டாக்குவன். அவ்வொலியின் குறிப்பினைக்கொண்டு தோழி தலைவியை அழைத்துச் சென்று தலைவன்பால் சேர்ப்பள். சில நாட்களில், தலைவன் வருவதற்கு முன்னரே வேறு வகையில் இவ்வொலி எழும்பல் கூடும். அவ்வேளை தோழி தலைவியுடன் வந்து தலைவனைக் காணாது தலைவியுடன் திரும்புவள். அவ்வொலிக் குறியே அல்லகுறி எனப்படும். தலைவியும் தோழியும் திரும்பியபின் தலைவன் தோன்றி, தலைவி வந்து சென்ற குறிகளைக் கண்டு மயங்கி நிற்பன். அப்பொழுது வேறு வகையி லெழுப்பப்பட்ட பறவை யொலியால் மருண்ட பெடையன்றில் கூவுதலைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கும். தலைவியின் மனையிலோ பறவைக் கூக்குர லாலும், அன்றிற் கூவுதலாலும் பலர் உறக்கமின்றி யிருப்பர். அவ்வமயமே தோழி இத்துறைச் செய்யுளைக் கூற முன்வருவள். அல்லகுறியால் 'தலைவன் கூட்டுறவின்மையும், தலைவியின் உறக்கங் கெட்டமையும் ஒருபுறமிருக்கட்டும், சேவலோடு சேர்ந்து வதியும் அன்றிற் பெடை எதற்காக இவ்வண்ணங் கூவுகிறது? என்பதும், இக்கூவலால், மனைவயினுள்ளோர் உறக்கங்கெட, அதனால், தலைவனை மறுமுறைசென்று காண வழியிலதே என்பதும் தோழி கருத்து. நெய்தல் - இரங்கலும், இரங்கனிமித்தமுமாகிய வொழுக்கம். இங்கு அல்லகுறிப்பட்ட தலைவன் தலைவியர் இரங்குதற்குரிய நிமித்தங்களும், இரங்கலும், வருகின்றமை காண்க.

(சக)

கொடுந்தா ளலவ! குறையா மிரப்பே
மொடுங்கா வொலிகடற் சேர்ப்ப—னெடுந்தேர்
கடந்த வழியையெங் கண்ணாரக் காண
நடந்து சிதையாதி நீ.

[காமமிக்க கழிபடர் கிளவி.]

(பத.) கொடும் தாள் - வளைந்த கால்களையுடைய, அலவ - நண்டே! ஒடுங்கா - அடங்காத, ஒலி - இரைச்சலையுடைய, கடல் சேர்ப்பன் - கடற்றுறைமுகத்தையுடைய தலைவனது, நெடும்தேர்-பெரியதேரானது, கடந்த - (என்னைப் பிரிந்து சென்றகாலத்து) ஊர்ந்துபோயின, வழியை-(தேர்க்கால் பதிந்த)பாதையினை, எம்கண் ஆர - எம்முடைய கண்கள் நன்றாக, காண - காணும்படி, நடந்து - (அதன்மேல்) சென்று, நீ சிதையாதி - நீ அழிக்காமல் இருப்பாயாக, (என்ற) குறை - வேண்டுகோளை, யாம் - நாம், இரப்பேம்-உன்னிடத்திலே கேட்டுக்கொள்கின்றோம். (என்று தலைவி கடற்கரையிற் கண்ட நண்டினிடம் கூறினாள்.)

(ப - ரை.) கோடியிருந்த தாளினையுடைய அலவனே! ஒரு காரியம் நின்னை யிரப்பேம்; ஒலியாநின்ற அடங்காத கடற்சேர்ப்பன் நெடுந்தேர் போயின வழியை எம்முடைய கண் நிரம்பக் காணும் வகை அதன்மேல் நடந்து அழியா தொழிவாயாக.

(விரி.) காமம் - காதல். கழிபடர் - மிகுந்த துன்பம். கிளவி - சொல். தலைவன் பிரிந்து சென்று குறிப்பிட்ட காலத்திற் றிரும்பாமையான் தலைவி காதன் மிகுந்து துன்ப மேலிட்டமை காரணமாகத் தன்னை மறந்து நண்டினிடம் இங்ஙனங் கூறலாயினள். (சஉ)

பொரிப்புறப் பல்லிச் சினையீன்ற புன்னை
வரிப்புற வார்மணன்மே லேறித்—தெரிப்புறத்
தாழ்கடற் றண்சேர்ப்பன் றூரகல நல்குமே
லாழியாற் காணுமோ யாம்.

[இதுவு மது.]

(பத.) (ஆழி) - கடல் இழைப்பானது, தெரிப்பு உற - (அடிப்பாகத்தே யுள்ள பொருள்) தெரியும்படியாகத் தெளிவுடன்

கூடி, தாழ் - தாழ்ந்து ஆழமாகவுள்ள, கடல் தண் சேர்ப்பன் - கடலோடு கூடிய குளிர்ந்த துறை முகத்தையுடைய தலைவனது, தார் அகலம் - மாலைகளணிந்த மார்பினை, நல்குமேல் - நமக்குக் கொடுப்பது உறுதியானால், பொரிப் புறம் - பொரிந்த வெளிப் பக்கத்தினையுடைய, பல்லி சினை - பல்லியின் முட்டையினைப் போன்ற அரும்புகளை, ஈன்ற - தோற்றுவித்த, புன்னை - புன்னை மரத்ினது பூந்துகள், வரி - வரியாகக் கிடக்கும், புறம் - மேற் பாகத்தினையுடைய, வார் மணல்மேல் - உயர்ந்த மணற்குன்றின் மேலே, ஏறி - சென்றிருந்து, ஆழியால் - அக் கூட லிழைப்பால், யாம் காணும் - நாம் அதனை அறிவோம். (என்று தலைவி தனக்குத் தானே கூறிக்கொண்டாள்.)

(ப - ரை.) பொரிந்த புறத்தையுடைய பல்லி முட்டை போல அரும்பினை யீன்ற புன்னைப் பூக்களையுடைய வரிப் பட்ட புறத்தினையுடைய உயர்ந்த மணற் குன்றின்மேல் ஏறி யிருந்து, தெளிவுறத் தாழ்கடற் றண்சேர்ப்பனுடைய தார் அகலத்தை நமக்கு நல்குமாயிற் கூடல் இழைப்பாற் காண்பேம் யாம்.

(விரி.) கூடல் இழைப்பாவது பெரும் வட்டமாக ஒரு கோட் டைக் கீறி, அதற்குள்ளே சிறு சுழிகள் பலவற்றை நிறையச் சுழித்து முடித்து, பின் அச் சுழிகளை இவ்விரண்டாக எண்ணி, ஒன்று மிஞ்சினால் தலைவன் விரைவிற் கூடானென்றும், மிஞ்சாது இரட்டையாக அமைந்தால், விரைவிற் றலைவன் வந்து கூடுவ னென்றும் கருதலாகிய பழைய வழக்கமாம். சினை - உவமை யாகு பெயர். புன்னை - முதலாகு பெயர். ஓ - அசைநிலை. (சரு)

கொண்கன் பிரிந்த குளிர்பூம் பொழினோக்கி
யுண்கண் சிவப்ப வழுதே னொளிமுகங்
கண்டன்னை யெவ்வம்யா தென்னக் கடல்வந்தென்
வண்டல் சிதைத்ததென் றேன்.

[பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்து மொழி கிளவியாற் றோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் செறிப்பறிவுறீஇ வரைவுகடாயது.]

(பத.) கொண்கன் - நின் தலைவன், பிரிந்த - (இற்செறிப்பால் நினைக் கூடவியலாது) பிரிந்து போன, குளிர் - குளிர்ச்சியான, பூ - பூக்கள் நிறைந்த, பொழில் நோக்கி - சோலையைப் பார்த்து, உண்கண் - மையுண்ட கண்கள், சிவப்ப - சிவப்பாகும்படி, அழுதேன் - (ஒருநாள் வருத்த மிகுதியால்) கண்ணீர்விட்டு நின்றேன், ஒளிமுகம் - ஒளியினையுடைய எனது முகத்தை, அன்னை - செவிலித்தாய், கண்டு - பார்த்து, எவ்வம் (உனக்கு வந்த) துன்பம், யாது என்ன - எப்படிப்பட்டது என்று கேட்க, (அதற்கு யான்,) கடல் - கடலின் அலையானது, வந்து - (கரைமீது) மோதிவந்து, என் வண்டல் - எனது விளையாட்டுச் சிறுமனையை, சிதைத்தது என்றேன் - அழித்தது (அதற்காக வருந்துகிறேன்) என்று சொன்னேன். (என்று தோழி தலைவியினிடங் கூறினாள்.)

(ப-ரை.) நம்மை இற்செறிக்கையாற் கொண்கன் பிரிந்த குளிர்பூம்பொழிலை நோக்கி உண்கண் சிவப்ப அழுத என்னுடைய ஒளி முகத்தைக் கண்டு அன்னை நினக்கு வந்த இடும்பை யாது என்னக் கடல் வந்து என்னுடைய விளையாட்டுச் சிற்றிலைச் சிதைத்தது என்று சொன்னேன்; எம் பெருமாட்டி!

(விரி.) "அழுதேன்," என்றமையாலும், "கடல் வந்தென் வண்டல் சிதைத்தது," என்றமையாலும் இச் செய்யுள் நெய்தற்றிணையாய தென்க. (சஉ)

ஈர்ந்தண் பொழிலு ளிருங்கழித் தண்சேர்ப்பன்
சேர்ந்தென் செறிவளைத்தோள் பற்றித் தெளித்தமை
மாந்தளிர் மேனியாய்! மன்ற விடுவனவோ
பூந்தண் பொழிலுட் குருகு.

[தலைமகனைத் தோழி வரைவுகடாதற் பொருட்டுத்
தலைமகள் வரைவுவேட்டுச் சொல்லியது.]

(பத.) மா தளிர் - மாவினது தளிர் போன்ற, மேனியாய் - வடிவினையுடைய மங்காய்! இரும் - பெரிய, கழி - உப்பங்கழிகளை யுடைய, தண் - குளிர்ந்த, சேர்ப்பன் - கடற்கரைத் தலைவன், ஈர்ம் தண் - மிகவுங் குளிர்ந்த, பொழிலுள் - சோலையினிடத்திலே, சேர்ந்து - என்னைக் கலந்து, (அதன் பின்னர்,) என் - எனது, செறி வளைத்தோள் - வளை யணிந்த தோளினை, பற்றி - பிடித்து, தெளித்தமை - (என் மனவருத்தத்தை மாற்றித்) தெளிவிப்பதற்காகக் கூறிய உறுதிமொழிகளை, பூந்தண் - பொலிவுமிக்க குளிர்ந்த, பொழிலுள் - அச்சோலையில் வாழும், குருகு - பறவைகள், மன்ற - உண்மையாக, விடுவனவோ-மறந்து விட வல்லனவோ? (அவை ஒருகாலும் மறக்க மாட்டா என்று தலைவி தோழியினிடங் கூறித் தனது வரைவு வேட்கையினைக் குறிப்பாகத் தெரிவித்தாள்.)

(ப-ரை.) குளிர்ந்த தண் பொழிலின்கண் இருந்து பெரிய கழியையுடைய தண்சேர்ப்பன் புணர்ந்து என் செறி வளைத் தோள் பற்றி என்னைத் தெளிவித்த வஞ்சினத்தை, மாந்தளிர் மேனியாய்! மெய்யாக மறந்து விட வல்லவோ? அப்பூந்தண் பொழிலுள் வாழுங் குருகுகள்.

(விர்.) வேட்டல் - விரும்பல். புணர்ச்சிக்கண் நிகழ்ந்த உறுதி மொழிகளைத் தலைவி கூறியது வரைவு வேட்கையினை மனத்திற் கொண்டதா லென்க. (சரு)

ஓதந் தொகுத்த வொலிகடற் றண்முத்தம்
பேதை மடவார்தம் வண்டல் விளக்கயருங்
கானலஞ் சேர்ப்ப! தகுவதோ வென்றோழி
தோணலந் தோற்பித்த னீ.

[பகற்குறி வந்து புணர்ந்து நீங்குந் தலைமகனைக் கண்ணுற்று
நின்று தோழி வரைவுகடாயது.]

(பத.) ஓதம் - அலைகள்வீசி, தொகுத்த - (கரையோரங்களில்) சேர்த்துவைத்த, ஒலி - முழங்குகின்ற, கடல் - கடலில் விளைந்த, தண்முத்தம் - குளிர்ந்த முத்துக்களை, பேதை - பேதைப்பருவ முடைய, மடவார் - சிறுபெண்கள், தம் - தமது, வண்டல் - விளையாட்டு மனைக்கு, விளக்கு-விளக்குகளாகக் கொண்டு, அயரும்-விளையாடுதற்கிடமான, கானல் - கடற்கரைச் சோலையினையுடைய, அம் சேர்ப்ப-அழகிய துறைமுகத்துக்குத் தலைவனே! நீ என்தோழி-நீ என் தோழியாகிய தலைவியின், தோள்நலம் - தோள்களின் நலத்தை, தோற்பித்தல் - (வரைவு வேட்கை மிகுதியால்) மெலிவித்தல், தகுவதோ - தக்கதாமோ? (என்று தோழி தலைவனை வினவினள்.)

(ப-ரை.) ஓதம் எறித்திரட்டிய ஒலிகடற் றண்முத்தங் களைப் பேதைமையுடைய மடவார் தம் வண்டற் சிறுமனைக்கு விளக்காக விருப்புச் செய்யும் கானலஞ் சேர்ப்பனே! நினக்குத் தகுவதொன்றோ? என்னுடைய தோழியுடைய தோள்களின் நலத்தை நீ தொலைவித்தல்.

(விரி.) பேதைமடவார் - ஏழு வயதுப் பெண்கள். தலைவி மணம் புரிந்து செய்யும் மனையற வாழ்க்கையை வேண்டினள் என்பார், "பேதை மடவார்தம் வண்டலில் தண்முத்தம் விளக் கயரும் கானலஞ் சேர்ப்ப !" என்றார். (௬௬)

பெருங்கட லுள்கலங்க நுண்வலை வீசி
யொருங்குடன் றன்னைமார் தந்த கொழுமீ
னுணங்கல்புள் ளோப்பு மொளியிழை மாத
ரணங்காகு மாற்ற வெமக்கு.

[தோழிக்குத் தலைமகன் சொல்லியது; அல்லது, தோழற்குச் சொல்லியதூஉமாம்.]

(பத.) பெரும் கடல் - பெரிய கடலானது, உள் கலங்க - உள்ளிடமெல்லாம் கலக்கங்கொள்ளும்படியாக, நுண்வலை - நுட்ப

மான வலையினை, வீசி-எறிந்து, ஒருங்குடன்-ஒன்றாக, தன்னைமார் தமையன்மார்கள், தந்த - கொண்டுவந்த, கொழு மீன் - கொழுத்த மீன்களை, உணங்கல் - (வெயிலிற் காயவைத்து) வற்றலாக்குங்கால், புள் - (அவற்றைக் கவரவரும்) பறவைகளை, ஒப்பும் - கவரவிடாமற் பாதுகாக்கும், ஒளி இழை - மின்னுகின்ற அணிகலன்களை யணிந்த, மாதர் - அப் பெண்மணி, எமக்கு - எனக்கு, ஆற்ற - மிகுதியும், அணங்கு ஆகும் - வருத்தும் தெய்வம் போலாவள். (என்று தலைவன் கூறினான்.)

(ப - ரை.) பெரிய கடல் உள்ளெல்லாங் கலங்க நுண்ணிய வலைகளாலே வீசி ஒருங்குடனே தமையன்மார் கொண்டுவந்த கொழுத்த மீன் உணங்கல்களைக் கவரும் புட்களை ஒப்புகின்ற ஒளியிழை மாதர் மிகவும் எமக்கு வருத்துந் தெய்வமாம்.

(விரி.) மீன் உணங்கல் - கருவாடு. இச் செய்யுள் பாங்கியிற் கூட்டத்துத் தலைமகன் தோழியின்மாட்டுக் குறைநயந்த காலத்துக் கூறியதாம். அன்றி, பாங்கற் கூட்டத்துத் தலைவன் பாங்கனிடத்துத் தலைவியின் இயல்பு கூறியதாம். தோழன் - பாங்கன், தோழி - பாங்கி. (சஎ)

எக்க ரிடுமணன்மே லோதந் தரவந்த
நித்தில நின்றிமைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப!
மிக்க மிகுபுகழ் தாங்குபவோ தற்சேர்ந்தா
ரொற்கங் கடைப்பிடியா தார்.

[தலைமகனைத் தோழி வரைவுகடாயது.]

(பத.) ஓதம் - அலையானது, எக்கர் - கரைமேல் எறும்படியாக, இடு மணல்மேல் - இட்ட மணலின்பேரிலே, தரவந்த - அவ்வலைவீச வந்து சேர்ந்த, நித்திலம் - முத்துக்கள், நின்று - நிலைபெற்று, இமைக்கும் - ஒளி விடாநின்ற, நீள் கழி - நீண்ட உப்பங்

கழிகளையுடைய, தண் சேர்ப்ப - குளிர்ந்த துறைமுகத்தையுடைய தலைவனே! தன் சேர்ந்தார் - தன்னை நெருங்கிய நட்பினருடைய, ஒற்கம் - குறைவுகளை, கடைப்பிடியாதார் - மேற்கொண்டு விலக்க முன்வராத மக்கள், மிக்க - (உலகத்தாரால்) கொண்டாடப்படும், மிகுபுகழ் - சிறந்த புகழை, தாங்குபவோ - மேற்கொள்ள வல்லவ ராவரோ? (ஆகார், என்று தலைவியினது குறைவாகிய வரைவு வேட்கையை முடிக்குமாறு தோழி தலைவனிடத்திற் குறிப்பாகக் கூறலாயினள்.)

(ப-ரை.) திரை வந்து இட்ட இளமணன்மேல் ஓதம் தரவந்த முத்தங்கள் நின்று விளங்காநின்ற நீண்ட கழி யினையுடைய தண்சேர்ப்பனே! உலகத்தின்கண் விளங்கிய மிகுபுகழைத் தாங்கவல்லரோ? தம்மைச் சேர்ந்தாருடைய தளர்ச்சியைக் கடைப்பிடித்துத் தீராதார்.

(விரி.) எக்கர் - மேலுக்கேறப் பண்ணல். கடைப்பிடித்தல் - மேற்கொண்டு முடித்தல். ஓ - எதிர்மறைப் பொருள் கொண் டுள்ளது. (சஅ)

கொடுமுண் மடற்றாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ
விடையு ளிழுதொப்பத் தோன்றிப்—புடையெலாந்
தெய்வங் கமழுந் தெளிகடற் றண்சேர்ப்பன்
செய்தான் றெளியாக் குறி.

[அல்ல குறிப்பட்டுப் பெயர்ந்தமை அறியத் தலைமகன்
சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.]

(பத.) கொடுமுள் - கொடிய முள்ளையுடைய, மடல் தாழை - பெரிய ஏடுகளையுடைய தாழை மரத்தினது, கூம்பு அவிழ்ந்த - குவிதல் நீங்கி மலர்ந்த, ஒள்பூ - ஒளியையுடைய பூவானது, இடை உள் - நடுவேயுள்ள சோற்றினாலே, இழுது ஒப்ப - வெண்ணெயி னைப் போன்று, தோன்றி - வெளிப்பட்டு, புடை எலாம் - நாற் புறங்களிலும், தெய்வம் - தெய்வமணத்தைப் போல, கமழும் -

மணக்கும்படியான, தெளி - தெளிந்த, கடல் - கடலினையுடைய, தண் சேர்ப்பன் - குளிர்ந்த துறைமுகத்தையுடைய தலைவன், தெளியா குறி - நம்மால் தெளிந்துகொள்ள முடியாத குறியினை, செய்தான் - செய்துவிட்டான். (ஆதலால், நாம் இன்று அல்ல குறிப் பட்டோம் என்று தோழி கூறினாள்.)

(ப-ரை.) கொடிய முள்ளையுடைய மடற்றாழையினது மொட்டவிழ்ந்த ஒள்ளிய பூக்கள் நடுவுள்ள சோற்றான் வெண்ணெய்போலத் தோன்றி மருங்கெல்லாம் தெய்வ மணம் போலக் கமழாநின்ற தெளிந்த கடற்றண்சேர்ப்பன் நம்மாற் றெளிக்கப்படாத குறியைச் செய்தான்; ஆதலால் அல்லகுறிப் பட்டேம்.

(விரி.) அல்லகுறி - தவறுதலான குறி. தலைவியும், தோழியும் அல்ல குறிப்பட்டுப் பெயர்ந்தபின் தலைவன் வழக்கம்போல் வந்து தலைவியைக் காணாது சிறைப்புறத்து மயங்கி நின்றானாக, அதனை யறிந்த தோழி தலைவனுக்குக் கேட்கும்படியாக, இல்லின் பக்கலிலிருந்து கூறியதாகு மிச்செய்யுள். அன்றி, தோழி தலைவனின் தீங்கெடுத்தியம்பியதுமாம். இஃது அகப்பொருள் விளக்க உரையாசிரியர் கருத்தாம். (சுகூ)

அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமாப் பூண்ட
மணியரவ மென்றெழுந்து போந்தேன்—கனிவிரும்பும்
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழாய்!
உள்ளுருகு நெஞ்சினே னாய்.

[இதுவு மது.]

(பத.) ஒளி இழாய் - மின்னுகின்ற அணிகலன்களை யணிந்த பெண்ணே! அணி - அழகிய, கடல் - கடலோடுகூடிய, தண்சேர்ப்பன் - குளிர்ந்த துறைமுகத்தையுடைய தலைவனின், தேர் - தேரினுள்ள, பரிமா - குதிரைகள், பூண்ட - அணிந்துள்ள, மணிஅரவம்

என்று - மணியோசை கேட்கிறதென்று நினைத்து, போந்தேன் - இல்லினைவிட்டு வெளிவந்து பார்த்தேன், கனிவிரும்பும் - பழங்களை விரும்பி வந்த, புள் அரவம் - பறவைகளின் ஒலியினை, கேட்டு - கேட்கப்பெற்று, உள் உருகும் - வருந்துகின்ற, நெஞ்சினேன் ஆய் - மனத்தோடு, பெயர்ந்தேன் - (மணி அரவம் அன்றென்று) திரும்பினேன். (என்று தோழி தலைவியினிடங் கூறினாள்.)

(ப-ரை.) நிலத்தைச் சூழ்ந்த கடற்றண்சேர்ப்பன் தேர்பூண்ட பரிமா அணிந்த மணியரவம் என்று கருதிச் சென்றேன்; கனிகளை விரும்புகின்ற புள்ளரவங்களைக் கேட்டு மணியரவம் அன்று என்று போந்தேன்; ஒளியிழாய்! உள்ளுருகும் நெஞ்சினேனாகி.

(விரி.) மணியரவம் - இரவுக்குறி. புள் அரவம் - அல்லகுறி. இச் செய்யுளின்கண், "ஒளியிழாய்," என்ற விளி காணப்படுகின்றமையின், இதன் கருத்தினை, "அல்ல குறிப்பட்டுப் பெயர்ந்தமை அறியத் தலைமகன் சிறைப்புறத் தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது," எனச் சிறிது மாற்றிக்கொள்வது பொருத்தமாமெனக் காண்க. அன்றி, தலைவி குறி மருண்டமையினைத் தோழிக்குச் சொல்லிய துறையுமாம். அணிகடல் - பூதேவியின் அரையினை அணிகலன்போல் சூழ்ந்த கடல் என்றுமாம். (ருய)

நெய்தல் முற்றும்.

ஐந்திணையைம்பது

முற்றியது.

செய்யுண் முதற்குறிப்பு அகராதி.

[எண்—பக்கம்]

அணிகடற்றண்	௫௪
அணிநிற மஞ்ஞை	௪
அழலவிழ் தாமரை	௨௯
இன்றல்கலீர்ம்	௪௪
ஈர்ந்தண் பொழிலுள்	௪௯
உதிரந்துவரிய	௩௬
உள்ளார் கொல்	௬
எக்கரிடு மணல்	௫௨
எறிந்தெமர்தாமுழுத	௨௨
ஒல்லென்றொலிக்கும்	௩௨
ஒல்லென்னொலிபுனல்	௩௩
ஓதந் தொகுத்த	௫௰
கடிதோடு வெண்டே	௪௰
கானக நாடன்	௧௬
குளிரும் பருவத்தே	௩௪
கொடுந்தாளலவ	௪௬
கொடுமுண்மடற்	௫௩
கொடுவரி வேங்கை	௨௰
கொடுவிலெயினர்	௩௯
கொண்கன் பிரிந்த	௪௮
கொண்டுழிப் பண்டம்	௨௬
கோடுயர் தோற்றமலை	௭
கோட்டமை வல்வில்	௩௮
கோலச் சிறுகுருகு	௨௮
சுனைவாய்ச் சிறுநீரை	௪௨
தண்வயலூரன்	௩௧
தெண்கடற் சேர்ப்	௪௫
தேரோன் மலை	௯
தோழியர் சூழ	௪௧
நானவின்றபாக	௧௨
நெடுமலை நன்னாட	௨௩
பண்புள்ளி	௧
பாவையும் பந்தும்	௩௭
பிரிந்தவர்மேனி	௰
புனைபூந்தழை	௧௭
பெய்வளைக் கையாய்	௩௰
பெருங்கடலுள்	௫௧
பொரிப்புறப்பல்லி	௪௭
பொன்னிணர்	௧௪
போதார்வண்டூதும்	௨௭
மஞ்சிவர் சோலை	௨௧
மடவைகாணன்	௪௩
மல்லர்க் கடந்தான்	௩
மால்வரை வெற்ப	௧௫
மின்னு முழக்கும்	௫
முல்லை நறுமலர்	௮
யாணரகல்வயல்	௨௮
வருவர் வயங்கிழாய்	௧௧
விலங்கல் விளங்கிழாய்	௩௭
வெறிகமழ் வெற்பன்	௨௪
வேங்கை நறுமலர்	௧௮

பதினெண் கீழ்க்கணக்குகள்.

	ரூ.	அ.
திருக்குறள் மூலம் ராப்பர்	0	3
ஷை கலிக்கா	0	6
ஷை பரிசுப் பதிப்பு	1	0
திருக்குறள் பொழிப்புரை கலிக்கா	1	8
ஷை பரிசுப் பதிப்பு	2	8
திருக்குறள் அறத்துப்பால் தண்டபாணி விருத்தியுரை கலிக்கா	1	12
ஷை பரிசுப் பதிப்பு	2	4
நாலடியார் மூலம்	0	3½
நாலடியார் அரும்பொருள் விளக்கத்துடன்	1	4
நானூற்பது மூலமும் உரையும்	1	8
நான்மணிக்கடிகை விருத்தியுரை	0	8
திணைமொழி ஐம்பது பழைய உரை	0	5
பதினெண் கீழ்க்கணக்கு மூலம் முதற்பாகம் கலிக்கா	0	12

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.
6, பவளக்காரத் தெரு, சென்னை.